பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆடி 12 புதன்கிழமை [28-07-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:209

# யாழ். கல்விச் சமூகம் நாளை அமைதிப் போர்!

## தமிழர் ஆசிரியர் சங்கம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 28

வன்னி மக்களுக்கு பாதை ஒன்று திறக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை உட்பட ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து யாழ். மாவட்டக் கல்விச் சமூகம் நாளை அமைதிப் போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கின்றது.

குடாநாட்டில் உள்ள ஐந்து வலய அலுவலகங்கள் முன்பாகவும் இடம்பெறவுள்ள இந்தப் போராட்டத்தில் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், விசேட பாட அலுவலர்கள், பாட இணைப்பாளர்கள், முதன்மை ஆசிரியர்கள், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மாணவர்கள் மற்றும் கல்வித் திணைக்கள ஊழியர்கள் ஆகியோரைப்பங்குபற்றுமாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் கேட்டுள்ளார்.

அன்றைய தினம் யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளின் மாணவர்களை வீடுகளில் இருக்குமாறு சங்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# பாதையைத் திறக்க உடன் நடவடிக்கை எடுங்கள்!

## தமிழ்க்கட்சிகள் கூட்டாக ஜனாதிபதிக்கு மனு

கொழும்பு, ஜூலை 28

வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்குமிடையில் பாதை ஒன்றைத் திறக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்க் கட்சிகள் கூட்டாக ஜனாதிபதியிடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளன.

இ. தொ. கா. தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமானால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு ஏற்ப இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் தொண்டமான் தலைமையில் அவரது அலுவலகத்தில் நேற்று நடந்த இந்தக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பாதை திறக்கக் கோரி

# மாணவர்கள் சமர்ப்பித்த மகஜரை ஏற்க ஐ. நா. அதிகாரி பின்னடிப்பு

## மல்லாவியில் நிகழ்ந்தது

வவுனியா, ஜூலை 28

வன்னிப் பகுதிக்கான போக்குவரத்துப் பாதை தொடர்ந்தும் மூடப்பட்டிருப்பதைக் கண்டித்து பேரணி நடத்தியோரால் கையளிக்கப்பட்ட மகஜரை மல்லாவியில் உள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் வதிவிடப் பிரதிநிதி ஏற்க மறுத்து விட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் 12.00 மணியளவில் மல்லாவியில் இடம்பெற்றுள்ளது.

வன்னிக்கான போக்குவரத்து தடைப்பட்டுள்ளதைக் கண்டித்து துணுக்காய் மற்றும் பாண்டியன்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பாடசாலைகளின் ஆசிரியர்

(10ஆம் பக்கம் பார்க்க))

# திருநெல்வேலி முகாமில் இளைஞன் சித்திரவதையினாலேயே உயிரிழப்பு

## மரண விசாரணையின் பின் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28

1998 செப்ரெம்பர் 11ஆம் திகதி திருநெல்வேலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது மர்மமான முறையில் மரணமான — குருநகரைச் சேர்ந்த ஞானசிங்கம் அன்ரன் குணசேகரம் — சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு மரணமடைந்துள்ளார் என்று அவரின் மரண விசாரணையின் முடிவுரையில் யாழ். மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் தெரிவித்துள்ளார்.

மரண விசாரணையின் முடிவுரையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

காலஞ்சென்றவர் 9-9-98 இல் கைது செய்யப்பட்ட நேரம் முதல் மரணமடைந்த நேரம் வரை வழக்கின் சந்தேகநபர்களான இராணுவ

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் நால்வர் கைது

திருகோணமலை, ஜூலை 28

திருகோணமலை துறைமுகத்துக்குள் கடந்த ஞாயிற்றுக்கிழமை 'நியூகோ எண்டூரன்ஸ்'' என்னும் பயணிகள் கப்பல் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ஓட்டோ உரிமையாளர் ஒருவரும் அவரது மனைவியும் அந்த ஓட்டோ ஓட்டுநரும் அவரது மனைவியும் பொலீசாரினால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். (உ-3)

# மட்டக்களப்புக்கும் மறியல் போர் பரவியது

மட்டக்களப்பு, ஜூலை 28

வடக்கு—கிழக்கில் பணிபுரியும் சகல அதிபர், ஆசிரியர்களுக்கும் இடர்காலக் கொடுப்பனவை சமனான ரீதியில் பங்கிட்டு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துத் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் நேற்று இரண்டாவது நாளாகப் போராட்டங்கள் இடம்பெற்றன.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சகல தமிழ், முஸ்லிம் பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர், ஆசிரியர்கள், மாகாணக் கல்வி அமைச்சு. மாகாணக் கல்வித் திணைக்களம் ஆகியவற்றுக்கு முன்பாக நேற்று இரண்டாவது நாளாக மறியல் போராட்டம் நடத்தினர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா, பட்டிருப்பு, மட்டக்களப்பு நகரம் ஆகிய வலய அலுவலகங்கள் முன்பாக மறியல் போராட்டம் நேற்று முதலாவது நாளாக

(10ஆம் பக்கம் பார்க்க)

# ஆஸிக் கடலில் பலியான பன்னிருவர்

கொழும்பு, ஜூலை 28

ஆஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோதமான முறையில் படகு ஒன்றில் நுழைய முயன்ற சமயம் கிறிஸ்மஸ் தீவுக் கடலில் கடந்த வாரம் இடம்பெற்ற விபத்தில் காணாமற்போன ஈழத் தமிழர்களில் 12 பேரின் பெயர் விவரங்களை ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ளது.

இந்த விபத்தில் தப்பிய ஐவரிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இந்தப் பெயர் விவரங்கள் வெளியாகியுள்ளன.

பிரஸ்தாப ஐவரும் பொலீஸாரால் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# கிருபாவின் பூதவுடல் நேற்று தீயில் சங்கமம்

## நகரில் முழுக் கடையடைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமான புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளரும், யாழ். மாநகரசபை உறுப்பினருமான செல்லையா கிருபைராஜாவின் இறுதி அஞ்சலி மற்றும் இறுதிக்கிரியை நிகழ்வுகள் நேற்று யாழ். நகரில் நடைபெற்றன.

அவரது சடலம் நேற்று முன்தினம் வவுனியாவில் இருந்துயாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டு அவரது தாயார்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இருந்து

# 2,000 பேர் இன்று புலிகள் பகுதிக்கு?

வவுனியா, ஜூலை 28

வன்னியில் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதியிலிருந்து வவுனியாவுக்கு வந்து மீளத் திரும்ப முடியாமல் நிர்க்கதி நிலையில் உள்ள 2 ஆயிரம் பேர் இன்று உயிலங்குளம்—பள்ளமடுப் பாதை ஊடாக இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்குப் படையினரால் அனுப்பி வைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

வெள்ளைக்கொடிகளை ஏந்திய வண்ணம் இவர்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குச் செல்வர் என்று வவுனியாவில் அறிவிக்கப்பட்டுள்ள போதும்—

தமதுஇணக்கம்ஏதும்இன்றி ஒரு தலைப்பட்சமாக படைத்தரப்பால் அனுப்பிவைக்கப்படுபவர்களை தமது பிரதேசத்துக்குள் பாதுகாப்பாக ஏற்றுக்கொள்வதற்கு விடுதலைப் புலிகள் இணங்குவார்கள் என்பது கேள்விக்குறியாக உள்ளதாகத் தெரிவிக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## சரவணபவானந்தன் குலசிங்கம்

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்ட சரவணபவானந்தன் குலசிங்கம் 26-07-1999 அன்று மாத்தளையில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணபவானந்தன் — மனோன்மணி தம்பதிகளின் மூத்தபுதல்வனும், காலஞ்சென்ற மலாயன் பென்ஷனர் ஆறுமுகம்—கனகாம்பிகை தம்பதிகளின் மருமகனும் இரத்தினேஸ்வரியின் அன்புக்கணவரும், குலசுந்தரி, குலரட்ணம், குலச்செல்வி, குலசத்தியன், குலசீலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் குலசூரியின் அன்புத் தமையனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மாத்தளையில் (29-7-99) வியாழக்கிழமை நடைபெறும்.

தகவல்:
ஆ. பத்மநாதன்
(மைத்துனர்)
சித்தன்கேணி

21 A, விகாரை றோட்,
மாத்தளை.
(67765)

## தம்பிப்பிள்ளை நாகராசா

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை தட்டாதெருவைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை நாகராசா 24-07-99 அன்று காலமானார்.

இவர் மகேஸ்வரியின் அன்புக்கணவரும் பாலச்சந்திரன் (டென்மார்க்), பாலபாஸ்கரன் (தேவன்), கோணேஸ்வரன் (கொழும்பு), கமலதாஸ் (மாணவன், விவசாய பீடம்), கலைவாணி ஆகியோரது அன்புத் தகப்பனாரும் கேதீஸ்மலர், இந்துமதி, ராகினி ஆகியோரது மாமனாரும் காலஞ்சென்ற பரிமளத்தின் சகோதரனும் நந்தகோபால் (ரூபி நகைப் பூங்கா), சுந்தராம்பாள், சரஸ்வதி ஆகியோரது மைத்துனரும், காலஞ்சென்ற சோமசுந்தரம், வைரவநாதன், யோகலட்சுமி ஆகியோரது சகலனும், மாதினி, விஷ்ணுப்பிரியா, கிருஷாந்த், அனுஷாந்த், விஷாணி, விஷ்ணு சந்தியா, சானுஜா ஆகியோரது பாட்டனாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று 28-07-99 காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் கோம்பையன்மணல் மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. பாலபாஸ்கரன்
(மகன்)

521/2, காங்கேசன்துறை வீதி,
கட்டாதெரு,
யாழ்ப்பாணம்
(67757)

## ஐயாத்துரை நல்லையா

தாவடியைச் சேர்ந்த ஐயாத்துரை நல்லையா 27-07-99 செவ்வாய்க்கிழமை காலமானார்.

இவர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலேஸ்வரி, நவரட்ணம் [அவுஸ்திரேலியா], காலஞ்சென்ற சிவசப்பு ஆகியோரின் அன்புச் சகோதரரும், தெய்வேந்திரா [கனடா], மகேந்திரா, சுநந்தினி [ஆசிரியை, வவுனியா], மதிவதனி [கனடா], ரவீந்திரா [கொழும்பு] ஆகியோரின் அன்புத் தந்தையும், மாலினி [கனடா], பத்மரஞ்சினி, ஜெயசீலன் [நீர்ப்பாசன திணைக்களம், வவுனியா], சிவதாசன் [கனடா] ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜித்திரா [கனடா], மிஜித்திரா [கனடா], தீபிகா [வவுனியா], சிந்துஜா [கனடா], பானுஜா [கனடா], இமாயினி, பவாஜினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [28-7-99] புதன்கிழமை காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
ந. மகேந்திரா
[மகன்]

நந்தாவில் மேற்கு,
தாவடி
[67771]

## திருமதி ஆறுமுகம் சிவகாமிப்பிள்ளை
(மாணிக்கம்)

காரைநகர் பாலாவோடையைப் (அம்பிளா) பிறப்பிடமாகவும் ஸ்கந்தபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவகாமிப்பிள்ளை 25 07-1999 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவராசலிங்கம், பஞ்சலிங்கம் (டென்மார்க்), மனோரஞ்சிதமலர் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், குழந்தைவேலு (கனடா), ரஞ்சிதமலர் (ஸ்கந்தபுரம்), ராசமலர் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான K T கனகசபை, (தொப்பி) (இராமநாதபுரம்), K T. கந்தையா (பொன்னம்பலம் —முன்னாள் புள்ளிவிவர ஆணையாளர்) ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26 – 07 - 1999 அன்று ஸ்கந்தபுர மயானத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
க. வி. குலரத்தினம்
(பேரமகன்)

லிங்கன் ஸ்ரோர்ஸ்,
168, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(67777)

## அறிமுகமும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம், ஜூலை 28

வித்துவான் க. சொக்கலிங்கம் எழுதிய 'உரைநடைத் தெளிவு' நூல் அறிமுகமும் கலந்துரையாடலும் இன்று புதன்கிழமை மாலை 3. 30 மணியளவில் இணுவில் மத்திய கல்லூரியில் எழுத்தாளர் துரைஎங்கரசு தலைமையில் நடைபெறும்.

வணபிதா. கலாநிதி எஸ். ஜெபநேசன், கவிஞர். சோ. பத்மநாதன், ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் ஆகியோர் நூல் பற்றிய மதிப்புரையாற்றுவர். பாலர் கல்விக் கழகத் தலைவர் இ. தவகோபால் முதல் பிரதியை பெறுவார்.

(இ-4)


## பாலர் ஆசிரியராக பயிற்சி

தகைமை:
க. பொ. த. சாதாரணதரம்
அல்லது மேல்
தபாலில் ஆறு மாதங்களில்
பயிலலாம்.

பாலர் ஆசிரியர்சங்கம்
கொக்குவில்.
(6759 1)

## றீகல் சினிமா

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

காதலர் தினம்
(நேரடி CD யில்)
காட்சிகள்: 10-30, 2-30
5-10 மணிக்கு
Jacky Jan நடித்த
LAST HERO IN CHINA
(கராட்டி)

## றீகல் டாக்கீஸ்

ஈச்சமோட்டை
நேரடி CD யில்
சங்கமம்
காட்சிகள்: 10-30, 2-30
பிரவேசம் 15 ரூபா
(6778 )

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.
இன்று
முன்னணி
நடிகர் – நடிகைகளின்
சுயம்வரம்
(புதிய வெளியீடு)
நேரம்; 10-30, 2–30
(67708)


## முழு நிலா நாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முழுநிலா நாள் கருத்தரங்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 3. 30 மணிக்கு இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் யாழ். இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் க. சி. குகதாசன் தலைமையில் நடைபெறும்.

இந்தக்கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் ச. சத்தியசீலன் ''காஷ்மீர் பிரச்சினைகளும் அதன் அண்மைக்காலத் தாக்கங்களும்'' என்ற தலைப்பிலும், புவியியற்றுறை முதுநிலை விரிவுரையாளர் ஏ சூசை ஆனந்தன் ''இந்திய—பாகிஸ்தான் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடும் அச்சூழலின் புவியியற் பின்னணியும்'' என்ற தலைப்பிலும் உரை நிகழ்த்துவார்கள். (இ)

★ ★ ★

தென்மராட்சி, ஜூலை 28

சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கமும், பாடசாலை அபிவிருத்திச்சபையினரும் இணைந்து நடத்தும் முழுநிலாக் கருத்தரங்கு இன்று புதன் காலை 9. 30 மணிக்குக் கல்லூரி வெற்றிவேலு மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழகப் பொருளியல் துறைத் தலைவர் கலாநிதி வீ. பி. சிவபாலன் ''ஐரோப்பிய ஒன்றியமும் யூரோ நாணயமும்'' என்னும் பொருள் பற்றி உரைநிகழ்த்துவார். (இ–117)

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 28

சில்லாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில்—

யாழ். பல்கலைக்கழக ஓய்வு பெற்ற மருத்துவ பீடாதிபதியும், இரசாயனத்துறை பேராசிரியரும் இந்தச் சங்கத்தின் தலைவருமான கலாநிதி க. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கான பாராட்டுவிழா இன்று புதன்கிழமை காலை 9 மணியளவில் கல்லூரியின் அன்ரன் இராசநாயகம் மண்டபத்தில் நடைபெறும்.

கலாநிதி க. பாலசுப்பிரமணியம் விஞ்ஞான ஆராய்ச்சி மேம்பாட்டுத்திறனை நயந்து யாழ். பல்கலைக்கழகம் 'விஞ்ஞானக்கலாநிதி' என்ற பட்டத்தினை வழங்கிக் கௌரவித்ததைக்காகவே இந்த பாராட்டு விழா எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

(இ-4)

## ஆணின் சடலம் கரை ஒதுங்கியது

யாழ்ப்பாணம், ஜூலை 28

கொழும்புத்துறை கடற்கரைப் பகுதியில் அழுகிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்றுக் கரை ஒதுங்கியது.

இனங்காணப்படுவதற்காக அது யாழ். பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(உ-139)

## கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் யோர்ச் வெப்ஸ்ரர் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்கான — 6 பேர் கொண்ட அணிகளுக்கு இடையில் —6 ஓவர் கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இன்றைய ஆட்டங்களில் சென்றலைட்ஸ் (புளூஸ்) அணி, ஸ்ரான்லி வி.க அணி, சென்றலைட்ஸ் (சொக்ஸ்) அணி, யங்ஸ்ரார் (மஞ்சள்) அணி, பற்றீஷியன் அணி ஆகியன பங்குபற்றுகின்றன.

(உ–3)

## கண்ணீர் அஞ்சலி

தாதிய பயிற்சிப் பாடசாலை ஊழியர்
திருமதி அன்ரன் ராஜ்குமார் எஸ்மி
அவர்களின் அன்புத் தாயார்

**எட்வேட் யூலியட் பொனிபஸ்**

அவர்களின் மறைவையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

அதிபர், போதனாசிரியர்கள், மாணவர்கள்,
அலுவலக ஊழியர்கள்
தாதிய பயிற்சிப் பாடசாலை,
யாழ்ப்பாணம். (67790)

உ
கந்தவனநாதன் துணை

# தசாக கிருகயக்ஞ அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் பிரமாதி வருடம் ஆடி மாதம்
4 ஆம் நாள் (20 - 07 - 1999) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த

எமது அன்புத் தாயார்
**ஸ்ரீமதி சந்தானராம சர்மா சாவித்திரி அம்மா**
அவர்களின்

ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் திகதிகளில் எமது இல்லத்தில் நடைபெறும்.

தசாகம் ஆடி மாதம் 13 ஆம் நாள்
29-07-1999 வியாழன் காலை 10 00 மணியளவிலும்

ஏகோதிஷ்டம் – மாசிகம் ஆடி மாதம் 14 ஆம் நாள்
30-07-1999 வெள்ளி

சபிண்டீகரணம் ஆடி மாதம் 15 ஆம் நாள்
31-07-1999 சனி

கிருகயக்ஞம் – சமாராதனை (மதிய போசனம்)
ஆடி மாதம் 16 ஆம் நாள் 01 - 08 - 1999 ஞாயிறு

மேற்படி கிரியைகளிலும் 1999 - 08 - 01 அன்று நடைபெறவிருக்கும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சந்தவனக் கோயிலடி,
[illegible]
வல்வெட்டித்துறை.
(67785)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக். ஊடுருவல்காரர்கள் முற்றாக வெளியேற்றம்

## இந்தியா அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 27

இந்தியாவின் கார்கில் பகுதியில் இருந்து பாகிஸ்தான் ஆதரவிலான ஊடுருவல்காரர்களையும் பாகிஸ்தான் இராணுவத்தினரையும் முழுமையாக வெளியேற்றி விட்டதாக இந்தியா அறிவித்துள்ளது.

கார்கிலில் இருந்து ஊடுருவல்காரர் திரும்பிச் செல்ல விதிக்கப்பட்ட காலக்கெடு கடந்த 16 ஆம் திகதி முடிவடைந்த பின்னர் இந்தப் பகுதியில் நிலை கொண்டிருந்த ஊடுருவல் காரர்களை வெளியேற்றும் நடவடிக்கையில் கடந்த மூன்று நாள்களாக இந்தியப்படைகள் ஈடுபட்டிருந்தன.

இந்தியப்படையினர் மேற்கொண்ட கடும் இராணுவ நடவடிக்கையின் பின்னரே நேற்று முன்தினம் இவர்கள் வெளியேறியதாக இந்திய இராணுவக் கட்டுப்பாட்டு இயக்குநர் எம்.சி. எஸ்.விஸ் தெரிவித்தார்.

எம். சி. எஸ். விஸ் மேலும் தெரிவித்ததாவது:

முஸ்கோபட்டாலி துணைப் பிரிவுகளில் இருந்து திங்கட்கிழமையும் டிராஷ் துணைப் பகுதியில் இருந்து ஞாயிற்றுக்கிழமையும் ஊடுருவல்காரர் அகற்றப்பட்டு விட்டனர்.

இந்திய — பாகிஸ்தான் எல்லைக்கட்டுப்பாட்டுக் கோட்டில் புதிய நிலைகளில் முகாமிடுவதில் இருநாடுகளின் இராணுவத்தினரும் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

கட்டுப்பாட்டுக் கோட்டை அண்மித்த ஒரு கிலோமீற்றர் தூரத்தில் இரு தரப்பினரும் புதிய நிலைகள் எதனையும் அமைப்பது இல்லை என இரு நாடுகளின் இராணுவ நடவடிக்கை தலைமை இயக்குநர்கள் கடைசியாக தொலைபேசி மூலம் உரையாடிய போது ஒப்புக் கொண்டிருந்தனர் எனினும் பாகிஸ்தான் அதன்படி நடக்கவில்லை.

உலக அரங்கில்

பரவலான துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் பீரங்கித் தாக்குதலுடன் தீவிர கண்காணிப்பும் ரோந்துப் பணியும் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இரு நாடுகளுக்கும் இடையில் ஏதாவது ஓர் ஒப்பந்தம் எட்டப்படும்வரை கட்டுப்பாட்டுக் கோட்டின் எஞ்சிய பகுதியிலும் ஜம்மு—காஷ்மீரின் சர்வதேச எல்லையை அண்மித்த பகுதியிலும் இந்திய இராணுவத்தினரை நிறுத்தும் பணி தொடரும்.

இந்தியப் பிரதேசத்தில் பாகிஸ்தானியர் எவரும் தற்போது இல்லை. ஊடுருவற்காரர் எஞ்சிய பகுதியில் இருந்து விரட்டியடிக்கப்பட்ட பின்பு இப்பகுதி முழுவதும் ஊடுருவற்காரர்கள் இருக்கிறார்களா என்பது துலக்கப்பட்டு விட்டது.

கார்கிலில் இருந்து கடைசி பாகிஸ்தானியரை வெளியேற்றியதுடன் '' ஒப்பரேசன் விஜய் '' இராணுவ நடவடிக்கையின் இலக்கை இந்திய இராணுவம் எட்டிவிட்டது. எல்லைக் கட்டுப்பாட்டுக்டுக் கோட்டில் பழைய நிலை எட்டப்பட்டுள்ளது.

இப்படி அவர் கூறினார்.

(இ-க)

## திபெத் சரணாலயத்தில் கொம்பு முளைத்த குதிரை!

திபெத்தில் உள்ள சிவப்பு மான் சரணாலயக் காடுகளில் கொம்பு முளைத்த குதிரை ஒன்றை ஆய்வாளர்கள் சமீபத்தில் கண்டுபிடித்தனர்.

'ஸின்குவா' செய்தி நிறுவனம் திபெத்தியத் தலைநகரான லாஸாவிலிருந்து இத்தகவலைத் தெரிவித்துள்ளது.

சீனாவின் சாங்ரிபா நிலத்தில் சிவப்பு மான் சரணாலயம் உள்ளது. இந்தச் சரணாலயம் கடல் மட்டத்தில் இருந்து 4 ஆயிரம் மீற்றர் உயரத்தில் 1. 500 ச. கி. மீ. பரப்பளவில் பரந்துள்ளது. பழுப்பு நிறக் கரடி, மங்கோலிய மான், சிவப்பு மான் உட்பட ஏராளமான விலங்குகள் இங்கு வசிக்கின்றன. சிவப்புமான் சரணாலயம் என்றே இது அழைக்கப்படுகிறது.

தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த அதிசயக் குதிரை கரும் பழுப்பு நிற முடியுடன் காணப்படுவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

11 வயதுள்ள இக்குதிரையின் கொம்புகள் இரண்டும் 5. 5 செ. மீ. உயரம் கொண்டவை. உருவ அமைப்பில் குதிரையை முழுமையாக ஒத்திருக்கும் இதன் கொம்புகள் மட்டும் சிவப்பு மான்களின் கொம்புகளைப்போல் காணப்படுகின்றன.

குதிரைக்குக் கொம்பு முளைத்ததுக்கான சரியான காரணம் எதையும் உயிரியல் நிபுணர்களால் தீர்மானிக்க முடியவில்லை. இருப்பினும் மரபணுக்களின் அமைப்பில் ஏற்படும் திடீர் மாற்றங்கள் காரணமாகக் கொம்பு முளைத்திருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

[இ-8]

## 100 பேர் பலி

நேபாளத்தில் கடந்த ஆறு வாரங்களாகப் பெய்த பருவ மழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினாலும். மண் சரிவினாலும் நூறு பேர் வரை உயிரிழந்துள்ளனர் பலர் காணாமற் போய்விட்டனர்.

நேபாளத்தின் 75 மாவட்டங்களில் 60 மாவட்டங்கள் வெள்ளப் பெருக்கினாலும் மண் சரிவினாலும் பாதிக்கப்பட்டுள்ளன அத்துடன் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அரசு அச்சம் தெரிவித்துள்ளது.

வெள்ளப்பாதிப்புக்கு உட்பட்ட பகுதிகளுக்கு நிவாரண உதவிகளை அரசு வழங்கி வருகின்றது. (க)

## கடும் தண்டனை என அறிவிப்பு

தலிபானுக்கு எதிரான போரில் பிடிபடும் வெளிநாட்டவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவர் என வடக்கு ஆப்கானிஸ்தானில் உள்ள அஹமத்ஷா மசூத்தின் தலைமையிலான தலிபானுக்கு எதிரான கூட்டணி அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் மற்றும் அரேபியத் தீவிரவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து தலிபான் அமைப்பு பெரும் தாக்குதலை நடத்தத் திட்டமிட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அதனைத் தொடர்ந்தே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

(இ-க)

## விமானம் தீப்பிடித்தது

சீனாவில் இருந்து ரஷ்யா நோக்கிச் சென்று கொண்டிருந்த 'இல்யூஷின் -76' விமானம் சைபீரியாவில் தரையிறங்கிய போது தீப்பற்றி எரிந்தது

எரிபொருள் நிரப்புவதற்காக தரை இறங்கியபோதே இந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

விமானத்தில் பயணம் செய்த 5 சிப்பந்திகளும் மேலும் இருவரும் விமானத்தில் இருந்து குதித்து உயிர் தப்பினர். (க)

## தாய்வான்-சீன பிரச்சினை; எவரும் தலையிடக் கூடாது

### சீன அமைச்சர் எச்சரிக்கை

லண்டன் ஜூலை 28

தாய்வானுக்கும் சீனாவுக்கும் இடையிலான பிரச்சினையில் வேறு எந்த நாடும் தலையீடு செய்யக் கூடாது,

மேற்கண்டவாறு உலக நாடுகளை சீனா கோரி உள்ளது.

சிங்கப்பூரில் நடைபெற்ற தென்கிழக்காசிய நாடுகள் சங்கத்தின் பிராந்தியப் பாதுகாப்பு அமைப்பின் உச்சி மாநாட்டிலேயே சீன வெளியுறவு அமைச்சர் ராங் ஜியாஸுவான் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

இந்த மாநாட்டில் ஆசியான் உறுப்பு நாடுகளான சிங்கப்பூர், இந்தியா, மலேசியா, தாய்லாந்து, மியன்மார், இந்தோனேசியா, புருணை வியட்நாம், கம்போடியா, லாவோஸ், பிலிப்பைன்ஸ், ஆகியவற்றுடன் அமெரிக்கா, ஜப்பான், சீனா, கனடா, தென் கொரியா, நியுசிலாந்து, ஆஸ்ரேலியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளும் கலந்து கொண்டன.

சீனாவின் பிராந்தியமும் இறைமையும் பிரிக்கப்பட முடியாதவை. இது விடயத்தில் எந்த விதமான அத்துமீறலையோ தலையீட்டையோ சகித்துக் கொள்ள முடியாது என்று சீன வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார்.

தாய்வான் சுதந்திர பிரகடனம் செய்வதற்கான எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுமேயானால் — தாய் நாட்டில் இருந்து தாய்வானைப் பிரிக்க வெளிச்சக்திகள் முயற்சிகளை எடுக்குமேயானால் — சீன மக்களும் அரசும் வெறுமனவே கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்கப் போவதில்லை என்றும் அவர் சொன்னார்.

(இ-க)


பருத்தித்துறை

மருதடி குருமணல் கந்தசுவாமிகோயில்

தேர், தீர்த்த, பூங்காவன உற்சவங்கள்

28-07-99 இன்று தேர் காலை 10 மணி

29-07-99 நாளை தீர்த்தம் காலை 10 மணி

30-07-99 நாளை மறுதினம் பூங்காவன உற்சவம் (இரவு விசேட நிகழ்ச்சிகளுடன)

மஹோற்சவ பிரதமகுரு:

கிரியாகலாபமணி சிவஸ்ரீ சுப்ர. கௌரிபாலக் குருக்கள்

ஆலய குரு:

சிவஸ்ரீ க. சபாரத்தினக்குருக்கள்

[67772] - ஆலய இளைஞர்கள்.



31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் சின்னத்துரை சுந்தரராஜா

அன்னை மடியில் 24-12-1927

ஆண்டவன் அடியில் 28-06-1999

தந்தையே யெங்கள் தயவான கோமானே
எந்தையே யெம்மை விட்டெங்கே சென்றாயோ
சிந்தனை யெல்லாம் எம்மீதே யுடையானே
வந்தனை செய்கிறோம் வந்திடப்பா எம்மிடையே

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

[67778]



31 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

மண்ணில் 20 - 08 1935



விண்ணில் 29 06 1999

அமரர் அருளப்பு பிலிப்பையா

(இளைப்பாறிய ஆசிரியர்)

இறைவனடி சேர்ந்த எனது கணவரின் இறுதிச் சடங்கில் நேரிலே கலந்து கொண்டும் மலர் வளையங்கள் வைத்தும் அனுதாபச் செய்திகள் தெரிவித்தும் கண்ணீர் அஞ்சலிகள் பிரசுரித்தும் உற்ற வேளையில் உடன் வந்து உதவிகளும் புரிந்த உற்றார், உறவினர் நண்பர்கள், குருக்கள், கன்னியர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

அன்னாரின் நினைவாக பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் 29 - 07 - 99 வியாழன் 6.30 (பு. நே.) மணியளவில் நடைபெறும் திருப்பலியிலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்

பிரிவால் துயருறும்
மனைவி. மகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

கடற்கரை வீதி,
பாஷையூர்.

(சி/8331)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

**தேவை**

இறைச்சிக்கோழிகள் தேவை. நல்ல விலை கொடுக்கப்படும். தனபாலசிங்கம், இல. 19, முருகேசர்ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச்சந்தையடி, நல்லூர். (67756)

**யாழ்ப்பாணம்**

பத்தாயிரம் ரூபா பரிசாகப் பெற்ற ''எங்கள் நாடு'' நாடகத்தை ஞாயிறு இரவு யாழ். சேவையில் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நாடகநூல் யாழ்ப்பாணமா? கொழும்பா? ரூபா 50. (67766)

## அணி நிரல் தெரிவு

வலிகாமம் தெற்கு, ஜூலை28 16, 18, வயது கோட்டமட்ட உதைபந்தாட்ட அணி நிரல்களுக்கான தெரிவு நாளை வியாழக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். (இ-152)

**வாசகர் கவனத்துக்கு**

உதயன் 18 - 07 - 1999 ஞாயிற்றுக்கிழமை இதழின் 4 ஆம் பக்கத்தில் ''அம்பாள் பார்மசி அன்ட் குறோசறி'' (சாவகச்சேரி) என்ற ஸ்தாபனத்தின் பெயரில் வெளிவந்த விளம்பரத்தைத் தாம் பிரசுரத்துக்கென அனுப்பி வைக்கவில்லை என்று அதன் உரிமையாளர் திருமதி கே. முருகேசு அறிவித்துள்ளார். அந்த விளம்பரத்தினால் சம்பந்தப்பட்ட நிறுவனத்தினருக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சங்கடங்கள் குறித்து வருந்துகிறோம்.

— ஆசிரியர்

**தவறிவிட்டது**

ஈச்சமோட்டை வீதியைச் சேர்ந்த வேதநாயகம்அயன்ஸ்ரன் பாரதிராஜ் ஆகிய எனது விசேட அடையாள அட்டை சம்பத்திரியார் கல்லூரிச்சற்றாடலில்10-7-99இல் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல. 15, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (67753)

தம்பியையா சிவகுமார் என்பவரது தேசிய அடையாள அட்டை (இ. 692811593 V) யும், விசேட அ. அ. (இல. 0907004228) யும் இணுவில் மத்திய கல்லூரிக்கும், இணுவில் மக்கிலிவொட் மருத்துவமனைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள். ராஜா தகரத் தொழிலகம், கே.கே. எஸ். வீதி, இணுவில் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (67746)

**ஆங்கிலம்**

G. C. E, (O/L), G. A. Q, B. A, மாணவர், ஆசிரியர் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு சனி, ஞாயிறு நாட்களில் வீடுகளுக்குச் சென்று தனியாகவோ அல்லது சிறு குழுக்களாகவோ ஆங்கிலம் இலகு முறையில் கற்பிக்கப்படும். கடிதமூலம் தொடர்பு கொள்க. K. சோமசுந்தரம்' சந்தை ஒழுங்கை, சுதுமலை வடக்கு மானிப்பாய். வார நாள்களில் காலை 6.00 — 7.00 வரை மேற்படி விலாசத்தில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. (67748)

**MATHS ENGLISH**

விசேட வகுப்புக்கள் உயர்ந்த பெறுபேறுடைய O/L 99 இல் ஆரம்ப அறிவிலிருந்து Paper Class வரை ஆண்டு 9 — 10 வரை கற்பிக்கப்படும். ஆசிரியர் 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (67649)

**இறைச்சிக்கோழி**

இறைச்சிக்கோழி (Broilers) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல. 15, 6ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் (சின்னக்கடை அருகில்). (67762)

இறைச்சிக்கோழிகள் (பாதி உட்பட) சுத்தம்செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் அடைமுட்டையும், வாழைக்குட்டிகளும் உண்டு. இல. 19, முருகேசர்ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (67755)

**வீடு வாடகைக்கு**

வஸ்தியாம்பிள்ளைச் சந்திக்கு அருகில் பிரதான வீதியில் 3 அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: சபாநாயகம், இல. 33, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (67768)

**பிறிமா குஞ்சுகள்**

பிறிமா Hi - line இன சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் [29-7-9 ] வியாழன் மாலை பெற்றுக் கொள்ளலாம். பைரா, சமீரா, பிறிமா இன புறொயிலர் குஞ்சுகட்கு பதிவுகள் ஏற்கப்படும் தொடர்பு: வை. சிவகுமார், 461. நாவலர் வீதி, அத்தியடிச் சந்தி, யாழ்ப்பாணம். (67767)

**விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள சிசில் டிலெக்ஸ் குளிர்சாதனப் பெட்டி ஒன்றும் 3 பேஸ் - 10 கோஸ்பவர், 03 கோஸ்பவர், 05 கோஸ்பவர் மோட்டர்கள், மாம்பலகைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சோ. சிவராசா (மோட்டார் சைக்கிள் மெக்கானிக்), இல. 97, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (67769)

உத்தியோகத்தர்களுக்கேற்ற அழகான கார் வெஸ்பாஸ்கூட்டர்(35,000/-) ஆட்டுக்கடா விற்பனைக்குண்டு. தொடர்பு; 680, பருத்தித்துறைவீதி, (சந்தியா கடை முன்பாக), நல்லூர். (67770)

# கண்ணீர் அஞ்சலி

யா/யாழ். இந்து மகளிர் கல்லூரியின் முன்னாள் உபஅதிபர்

**திருமதி இராஜலட்சுமி வைத்திலிங்கம்**

அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதோடு அவரின் ஆத்ம சாந்திக்கும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், அலுவலக ஊழியர்கள்.

யா/ இந்து மகளிர் கல்லூரி.

[67781]

# VACANCY

## District e-mail Humanitarian Help Desk Project

**Post of officer - in-charge- Computer Unit**

Applications are invited for the above post from suitable candidates (both sex) who possess the following qualifications.

**Essential Requirements:**

1. Good Communication and Liaison Skills.
2. Fluency in verbal and written English
3. Computer skills in Windows word processing, database software and e-mail.
4. Ability to work methodically and Carefully and to regular deadlines
5. A Commitment to the work and ideals of the project

An attractive Salary awaits the right Candidate.

Apply with Bio-data and with names of two non-related refrees on or **before 07 - 08 - 1999 to:**

THE CHAIRMAN
**Council of NGOs**
100, Rasavinthoddam,
Jaffna.

(C/8328)

இன்று

# நூல் வெளியீட்டு விழா

**செல்லையா மெற்றாஸ்மயில்**

எழுதிய

1999 ஆம் ஆண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும்

## இசை நாடக - கூத்து மூத்த கலைஞர் வரலாறு

(35 கலைஞர்களின் கலை வாழ்வு)

**பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் நடைபெறவுள்ளது.**

இடம்: கைலாசபதி கலையரங்கம், யாழ். பல்கலைக்கழகம்
காலம்: 1999 - 07 - 28 புதன்கிழமை காலை 10 மணி [புதிய நேரம்]
தலைவர்: சங்கீதபூஷணம் சு. கணபதிப்பிள்ளை
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)

அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்

செ. மெற்றாஸ்மயில்
நூலாசிரியரும், செயலாளரும்,
பாரம்பரியகலைகள் மேம்பாட்டுகழகம்.

**ஓம் முருகன் நகை மாடம்**

கைதடிச்சந்தி, கைதடி.

கிளைகள்:
ஓம் மகாலட்சுமி நகைமாடம் — இருபாலைச்சந்தி, இருபாலை.
ஓம் முருகன் நகை மாடம் — சாவகச்சேரி.

(சி/8327)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**செல்வி பரமேஸ்வரி செல்லத்துரை**

தோற்றம் 1944 - 03 - 23
மறைவு 1999 - 06 - 28

அன்புத் தெய்வமே! எங்கள்
குடும்பத்தின் ஒளி விளக்கே!
உந்தனது சுவடுகள் காலத்தால்
அழியாதவை — உனது
உடலை மட்டும் தான் நாம் இழந்தோம்
நினைவுகள் அழிவதில்லை.

— குடும்பத்தினர்

'தாய் அகம்'
கோப்பாய் தெற்கு
கோப்பாய்.

(சி/8825)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாதை தடைப்பட்டதால் வன்னிமக்கள் பட்டினி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்

## ஜனாதிபதிக்கு மாணவர் ஒன்றியம் மகஜர்

வன்னிக்கான தரைப்பாதை தடைப்பட்டுள்ள காரணத்தால் அங்கு வசிக்கும் மக்கள் உணவு, மருந்துவகைகள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் வன்னி நிலைமை குறித்து நேற்று முன்தினம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

ஒரு மாத காலத்துக்கு மேலாக கஷ்டங்களை அனுபவித்து வரும் வன்னிப் பகுதி மக்களினதும், மாணவர்களினதும் நிலைமை பற்றி ஆழ்ந்த கவலை அடைந்துள்ளோம்.

தீவிர நோய்வாய்ப்பட்டுள்ள நோயாளர்கள் பலர் வன்னிப் பகுதிக்கு வெளியே செல்ல முடியாத காரணத்தால் அங்கேயே உயிரிழந்துள்ளனர்.

வன்னிப் பகுதியில் தமது பெற்றோரைக் காண்பதற்காகச் சென்ற பல்கலைக்கழக மாணவர்கள் பலர் அங்கிருந்து மீண்டும் யாழ். வர முடியாத காரணத்தினால் விரிவுரைகளுக்குச் சமுகமளிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

இதன் காரணமாக மனோதத்துவரீதியில் அந்த மாணவர்கள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர்.

அடுத்த மாத முற்பகுதியில் ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போதையசூழ்நிலையில் மாணவர்கள் தம்மைப் பரீட்சைக்கு ஆயத்தமாக்கிக் கொள்வது பெரிதும் கடினமானது. எனவே இவ்விடயம் குறித்து ஜனாதிபதி தலையிட்டு உரிய நடவடிக்கை எடுப்பது அவசியமானதொன்றாகும்.

மேலும் தாமதம் காட்டாமல் மனிதாபிமான அடிப்படையில் வன்னிப் பகுதிக்குப் பாதை ஒன்று திறக்கப் படுதல்வேண்டும்.

வன்னிப் பகுதியில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டபடி உயர்தரப் பரீட்சை இடம் பெறுவது உறுதிப்படுத்தப் படவேண்டும்.

இந்தப் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணப் படாவிட்டால் வன்னிப் பகுதி மக்களுக்கும், மாணவர்களுக்கும் எமது ஆதரவைத் தெரிவிக்கும் வகையில் அகிம்சை வழியிலான போராட்டங்களை நடத்தவும் திட்டமிட்டுள்ளோம். இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# கணனியை தமிழிலும் செயலாற்ற வைக்கும் முயற்சி நடைபெறுகின்றது

## நூல் வெளியீட்டு விழாவில் தகவல்

குருநகர், ஜூலை 8

தற்போது கணிப்பொறி ஐரோப்பிய மொழிகளுடன் சீன, யப்பான்மொழிகளிலும் செயலாற்றக்கூடியதாக இருக்கின்றது. இதேபோன்று தமிழ் மொழியிலும் செயலாற்றக்கூடியதாக மொழி மாற்றம் செய்வதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. இது இலகுவான செயலல்ல. பல கோடி ரூபா பணம் செலவிட்டே மேற்கொள்ளப்படவேண்டிய திட்டம். எனினும் நிச்சயமாக இது நிறைவு பெறும்—

எப்படித்தான் எத்தகைய மொழிகளில் மொழி மாற்றம் செய்யப்பட்டாலும் கணிப்பொறிக்குக் கொடுக்க வேண்டிய கட்டளைகளை ஆங்கிலத்தில்தான் கொடுக்க வேண்டும். ஆங்கில மொழி ஒன்றைத்தான் கணிப்பொறி ஏற்றுக்கொள்ளும். இதனை மாற்றி அமைக்க வேண்டுமானால் கணிப்பொறியின் அடிப்படையில் மாற்றம் செய்யவேண்டும் —

யாழ். சென் ஜோண்ஸ் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற செயல்முறைக் கணிப்பொறி நூல் வெளியீட்டு விழாவில் பேசிய நூலின் ஆசிரியர் குருசுமுத்து இராயப்பு மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் தமது ஏற்புரையில் மேலும் தெரிவித்ததாவது:

கணிப்பொறியின் ஆரம்ப கர்த்தாக்கள் ஜாவா மொழியையே பயன்படுத்திக் கணிப்பொறியின் அடிப்படையை அமைத்திருக்கிறார்கள். அந்த மொழி மூலம் தான் அனைத்தையும் மாற்றி அமைக்கவேண்டும். அது அவ்வளவு சுலபமல்ல.

கணிப்பொறி என்பது எங்கள் அறிவிற்கும் தகைமைக்கும் அப்பாற்பட்ட பொருள் என்ற மக்களின் சிந்தனையை இந்நூல் மூலம் போக்கிட முனைந்திருக்கிறேன். கணிப்பொறி பற்றி எதுவுமே அறிந்திருக்காத நிலையில் உள்ள மாணவன் தனக்குத் தேவையான ஆணைத் தொடர் (Programme) கல்வியை ஆரம்பிப்பதற்கும் கணிப்பொறியைக் கையாளுவதற்கு ஏதுவாகக் கணிப்பொறிபற்றிய தகவல், அதன் உறுப்புக்கள் பற்றிய விளக்கங்கள் கணிப்பொறியின் அடிப்படை (Basic), கட்டுமானம் (operating) இயக்கம் (System) செயற்பாடுகள், வழி நடத்தும் முறைகள், பராமரிப்புகள். பிழைகள் ஏற்படும் பட்சத்தில் சீர் செய்யும் முறைகள் போன்றவற்றின் விளக்கங்களுடன் இந் நூலில் எழுதியுள்ளேன்.

நவீன காலத்தில் சாதனை படைக்கும் ஆணைத் தொடர்களுக்கு வழிகாட்டலாய் விளங்கும் ''வின்டோ'' வின் நடைமுறைகளை விளக்கப் படங்களுடன் இந் நூலில் விளக்கியுள்ளேன். இத்தனையும் உள்ளடக்கப்பட்ட ஒன்றாக என்னுடைய பாணியில் வடிவமைத்துள்ளேன். நான் அறிந்த வரையில் ஈழத்தில் முதல் முறை வெளிவரும் கணிப் பொறி பற்றிய நூலாக இது இருக்கும் என நம்புகிறேன்.

பல்லாயிரம் மைல்களுக்கப்பால் நான் வாழ நேரிட்டாலும். வாழ்ந்த இடத்தில் இந்த கணிப்பொறி நூலை உருவாக்க நேரிட்டாலும் சொந்த மண்ணில் சோர்வே இல்லாத தமிழர்கள் மத்தியில் இந்த நூலை வெளியிடச் சந்தர்ப்பம் கிடைத்தமைக்காக பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அண்மையில் இந்தியாவில் கணிப்பொறி பற்றிய மகாநாடு நடைபெற்று பல வழிகாட்டல்களை தமிழுக்கு வழங்கியுள்ளமை பற்றி அறிந்திருப்பீர்கள்.

கணிப்பொறிக்கான விசைபலகை (Key Board) தமிழில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது 5 வருடங்களுக்கு முன் முன்னர் கனடா வாழ்புலம் பெயர்ந்த தமிழர்களால் வடிவமைக்கப்பட்டு இப்போது பயன்படுத்தப்படுகிறது. தமிழர்கள்புலம்பெயர்ந்துவாழும் நாடுகள் பலவற்றில் தமிழில் ஆணைத் தொடர்கள் பல உருவாக்கப்பட்டு உபயோகத்தில் இருக்கின்றன-என்றார்.

யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் கலாநிதி நா.தணிகாசலம் பிள்ளை தமது உரையில் தெரிவித்ததாவது:—

21 ஆம் நூற்றாண்டுக்கு ஏற்றவாறு எமது மக்களை மாற்றியமைக்கும் ஒரு கால்கோள் விழாவாக இன்றைய இந்நூல் வெளியீட்டு வைபவம் இடம் பெறுகின்றது. கணிப் பொறியின் செயற்பாட்டை செயற்படுத்தும் முறையை அறியாவிட்டால் கணனியை அறிய முடியாது.

தமிழுக்கு, எமது சமூகத்துக்கு இந்நூலாசிரியர் தந்த மதிப்பு இந்நூலாகும். [illegible] மின்றி கணனியைக் கற்க அவர் தமது பட்டறிவைப் பயன்படுத்தியுள்ளார். புலம் பெயர்ந்துள்ள தமிழர் ஆங்கில மொழியின்றி தமிழில் கற்க இந்நூல் உதவும். எங்களுடைய பாடசாலைகளுக்கு கணனிகள் வழங்கப்பட்டுள்ளன அலுவலகங்களிலும் கணனிகள் தற்போது உள்ளன. எல்லா மாணவர்களும் அலுவலகர்களும் கணனியைப் பயன்படுத்த ஆவல் கொண்டுள்ளார்கள். அவர்களுக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதமாகும் — என்றார்.

விழாவுக்குத் தலைமை வகித்த யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி வி கே. கணேசலிங்கம் தமது உரையில் சொன்னதாவது:

எமது மூதாதையர் சங்கம் வைத்து தமிழை வளர்த்தவர்கள். கல்வி முதற் பொருளாக இருந்தது. யாழ்ப்பாணத்தில் தமிழ்மூலம் கல்வி வளர்ந்தது.

பிரித்தானியர் இலங்கைக்கு வந்த பின்னர் தொழிலுக்காக ஆங்கிலம் படித்தோம். எமது பிரதேசத்தில் கல்வி சிறப்படைந்துள்ளது. எல்லோரும் தமது கையெழுத்தைப் போடக்கூடியளவிற்கு கற்றுள்ளார்கள்.

இன்றைய காலத்தில் முதலில்தமிழ், பின்னர்ஆங்கிலம், மூன்றாவதாக கணனி உள்ளது. கணனி இன்று எங்களை ஆட்டிப்படைக்கிறது. மனிதனுக்கு இல்லாத ஞாபக சக்தியை இது தருகிறது. கணனி நீதியான நிறுவனமாக உள்ளது.

இன்றைய உலகில் கணனி ''இன்ரனெற்'', ''பக்ஸ்'' ஆகியவை வேகமாக வளர்ந்து வருகின்றன.

கணனி பற்றிய நூல்கள் ஆங்கிலத்திலேயே உள்ளன. இந்நூல் தெவிட்டாத தேனாக உள்ளது. இது ஓர் அற்புதமான சாதனை. புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் எமது தமிழர் தமிழில் ஈடுபாடுடையவர்களாக உள்ளனர் என்பதற்கு இந்நூல் சிறந்த எடுத்துக்காட்டாகும் — என்று கூறினார்.

நூல் அறிமுக உரையை வி. ஜே. கொன்சன்ரைனும் வாழ்த்துரையை யாழ். பல்கலைக்கழக மொழியியல் துறை விரிவுரையாளர் அருட்திரு ஜே. ஈ.ஜெயசீலன் அடிகளாரும், மதிப்புரையை யாழ். பல்கலைக்கழக பதிவாளர் கலாநிதி க. குணராசா மற்றும் யாழ். [illegible] ஆகியோரும் நிகழ்த்தினார்கள். [அ-ரி-51]

# விமான ரிக்கெட் வழங்கும் முறையை மாற்றக் கோரிக்கை

விமானப் பயணிகளுக்கு பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாதத்துக்கு செல்லுபடியாகும் வகையில் இரு வழிக்கான ரிக்கெட் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுரிக்கெட் வழங்கிய திகதியிலிருந்து செல்லுபடியாகும் திகதியைக்கணிக்க வேண்டும்,

மேற்கண்டவாறு சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள்குழு யாழ். சிவில் நிர்வாக இணைப்பாளர் பிரிகேடியர் ரி. ஜீ. திலகரத்னவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கோரிக்கை விட்டுள்ளது.

கொழும்பு செல்லும் விமானப் பயணிகளுக்கான இரு வழிப் பயண ரிக்கெட்டின் செல்லுபடியாகும் காலத்தை இருமாதங்கள் கொண்டதாக வழங்குமாறு கோரி ஏற்கனவே எழுதிய கடிதம் தொடர்பாகவும் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவூட்ட விரும்புகின்றோம் என்று அக் கடிதத்தில் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு சுட்டிக் காட்டி உள்ளது, (ஐ-5)

# திருட்டுச் சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஒப்படைப்பு

## கிராம அலுவலர் கூட்டி வந்தார்

யாழ்ப்பாணம், ஜூலை 28

திருட்டுச் சம்பவம் தொடர்பாக பொலீஸாரினால் தேடப்பட்டு வந்த இரு சந்தேக நபர்கள் கிராமசேவை உத்தியோகத்தர் ஒருவரினால் யாழ். நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

யாழ். நகரிலுள்ள புடைவைக்கடை ஒன்றில் ஜூன் மாதம் 12 ஆம் திகதி இடம் பெற்ற திருட்டுத்தொடர்பாக ஏற்கனவே நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப் பட்டிருந்தனர்.

இத்திருட்டு தொடர்பாகத் தேடப்பட்டு வந்த மற்றைய இருவர்களான சின்னராஜா சதீஸ்வரன், ஜெயராஜ் சுரேஷ் ஆகிய சந்தேக நபர்களை ஒட்டுமடம் பகுதி கிராமசேவை உத்தியோகத்தரான எஸ். ரி சகுந்தலாதேவி அழைத்து வந்து நேற்றுமுன் தினம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தார்.

பொலீஸாரினால் கைது செய்ய முடியாத நிலையிலிருந்த மேற்படி சந்தேக நபர்களை ஒருபெண் கிராம உத்தியோகத்தர் அழைத்து வந்து நீதிமன்றத்தில் ஒப்படைத்ததைத் தாம் பாராட்டுவதாகப் பதில் நீதிவான் தெரிவித்தார்.

இந்தத் திருட்டுத் தொடர்பாக திருமதி ஜெயராஜ் லீலாவதி, ஆறுமுகம் ஜீவரட்ணம், தஹா நிஸாம், மாணிக்கம் பாஸ்கரன் ஆகியோர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப் பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. (உ—5—ரி)

# வாராந்த கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ். ஆற்றல் மேம்பாட்டு ஒன்றியத்தினால் நடத்தப் பட்டுவரும் வாராந்த கருத்தரங்கு இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு ஒன்றியப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

ஒன்றியத்தின் தலைவர் ப. குகராஜா தலைமையில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் யாழ். மாவட்டகல்வி வலயங்களின் இணைப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை 'பள்ளிக்கூட கட்டமைப்பும் பாடசாலை விட்டு விலகுவோரும்' என்ற தலைப்பில் உரை நிகழ்த்துவார். (ஐ-5)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 28

சாவகச்சேரி டச்சு வீதி, பழநி ஆண்டவர் ஆலயத்தின் 8 ஆவது பழநிவேல் பவனி இன்று புதன்கிழமை விசேட அபிஷேக ஆராதனையுடன் பிற்பகல் 1-00 மணிக்கு ஆரம்பமாகும்.

பழநிவேல் பவனி ஊர்வலம் ஆலயத்திலிருந்து டச்சு வீதி, ஹென்ஸ்மன் ஒழுங்கை, தபாற்கந்தோர் வீதி வழியாக செருக்கல் பிள்ளையார் கோயிலை அடைந்து மீண்டும் டச்சு வீதி வழியாக வடக்கு நோக்கி கனியார் ஒழுங்கை ஊடாகப் பிரதான வீதி வழியாக மீண்டும் ஆலயத்தை வந்தடையும்.

(ஐ-7-ரி-4)

★ ★ ★

வடமராட்சி, ஜூலை 28

தென்புலோலி உபயகதிர் காமம் முருகன் கோயிலின் புதியதேர் வெள்ளோட்டமும் ரதோற்சவமும் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

நாளை நடைபெறும் தீர்த்தோற்சவத்துடன் வருடாந்த உற்சவம் முடிவடையும்.

[க—173]

★ ★ ★

தென்புலோலி தான் தோன்றி உபயகதிர்காம முருகன் ஆலய புதிய தேர் வெள்ளோட்ட விழா இன்று புதன் கிழமை காலை 8 மணிக்கும் அதனையடுத்து இரதோற்சவம் காலை 10-00 மணிக்கும் இடம்பெறும். நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்குத் தீர்த்த உற்சவம் நடைபெறும்.

[ஐ-173]

வடமராட்சி, ஜூலை 28

பருத்தித்துறை மருதடி குருமணல் கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவத்தின் ரதோற்சவம் இன்று புதன் கிழமையும் தீர்த்தோற்சவம் நாளை வியாழக்கிழமையும் நடைபெறவுள்ளது.

(க-173)

★ ★ ★

உரும்பிராய் சிதம்பரசுப் பிரமணிய சுவாமி கோயிலில் இடம்பெற்று வரும் கதிர்காம உற்சவம் நாளை வியாழக் கிழமை தீர்த்த உற்சவத்துடன் நிறைவுபெறும்.

கதிர்காமம் கொடியேற்றத் தினத்தில் இங்கு இந்த உற்சவம் ஆரம்பமாகி நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு வைரவர் பொங்கல் இடம்பெறும்.

[க-152]

★ ★ ★

சுழிபுரம், ஜூலை 28

சுழிபுரம் கிழக்கு மாணிக்கம் வைரவர் ஆலயத்தில் ஒவ்வொரு மாதப் பூரணை நாளின் போதும் திருவாசகம் முற்றும் ஓதுதல் நிகழ்வு நடைபெற்று வருகின்றது.

(க-28)

★ ★ ★

தென்மராட்சி, ஜூலை 28

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்ட ஞான துர்க்கை அம்பாள் ஆலய அலங்கார உற்சவத்தின் தீர்த்தோற்சவம் நாளை வியாழக் கிழமை நடைபெற்று உற்சவம் நிறைவு பெறும்.

(க-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்டொப்பேக்... க்ரீம் பாம்

இது தலைவலியை நொடியில் பறந்தோடச் செய்கிறது. இதன் பிசுபிசுப்பற்ற தன்மை நெற்றியில் திட்டு திட்டாய் படியாமல் இலகுவில் காய்ந்து விடுகிறது. இந்த விசேட தயாரிப்பு தடிமன், உடல் வலிகளிலிருந்தும் நிவாரணம் அளிக்கிறது.




## காலம் மாறிப் போச்சு

*யாழ்ப்பாணத்தில் எமது ஏக விநியோகத்தர்.*
ஜெகன் மருந்தகம் 462/B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
மற்றும் யாழ்ப்பாணமெங்குமுள்ள மருந்தகங்கள் பல் பொருள் வணிக நிலையங்கள், அழகு சாதன கடைகள், சில்லறை கடைகள்.

(சி/8057)

---

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**

# சித்தமருத்துவ சத்திர சிகிச்சைமாணி (BSMS)

## புதிய அனுமதி 1998/99

மேற்படி பட்டப்படிப்பிற்கான கற்கை நெறிக்கு புதிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**கற்கை நெறிக்காலம்:** 5 வருடங்கள்.

**விண்ணப்ப முடிவு திகதி: 31 – 08 – 99**

**அனுமதிக்கான நிபந்தனைகள்**

மேற்படி கற்கைநெறிக்கு செப்ரெம்பர் 1996, ஒக்டோபர் 1997 ஆகிய ஆண்டுகளில் க. பொ. த. (உயர்தர) தேர்வுகளில் ஆகக்குறைந்த கல்வித் தகுதிகளைக் கொண்டிருக்கும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அனுமதிக்கு வேண்டிய ஆகக் குறைந்த தகைமை ஒரு விண்ணப்பதாரி

I. (அ) 1996 / 97 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் தாவரவியல்விலங்கியல்இரசாயனவியல்பௌதிகவியல்ஆகிய நான்குபாடங்களிலும் சித்தியடைந்திருப்பதுடன், அல்லது
(ஆ) 1996 / 97 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் தாவரவியல் விலங்கியல், இரசாயனவியல் ஆகிய 3 பாடங்களில் சித்தியுடன், பௌதிகவியலில் 25% ற்கு குறையாதபுள்ளிகளைப் பெற்று.

II. நான்கு பாடங்களுக்குமாக 180புள்ளிகளைப் பெற்றிருத்தலுடன்பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதியும் பெற்றிருத்தல் வேண்டும்.

மேற்குறித்த கல்வித் தகைமைகளுக்கு அமையாத, பூரணப்படுத்தப்படாத, தெளிவில்லாத, விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறாத விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களை யாழ். பல்கலைக்கழக சிறாப்பர் சருமபீடத்திலோ, யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையிலோ ரூபா 50/-ஐ செலுத்திய பற்றுச் சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம்பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் பெறவிரும்புவோ நிதியாளர் யாழ். பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு ரூபா 50/- செலுத்திப் பெற்றுக் கொண்ட காசுக் கட்டளையுடன் முத்திரை ஒட்டப்பட்ட சுயவிலாசமிடப்பட்ட 20 × 10 செ. மீ அளவுள்ள கடித உறையை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் களஞ்சியம், 154 ஆட்டுப்பட்டித்தெரு. கொழும்பு 13. தொலைபேசி இலக்கம்435620 என்னும் முகவரிக்கு அல்லது பிரதிப் பதிவாளர், பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை, யாழ். பல்கலைக்கழகம். யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் 23 × 10 செ மீ அளவு கொண்ட கடிதவுறையில் இடதுபக்க மூலையில் சித்த மருத்துவக் கற்கை நெறிக்கான விண்ணப்பம் எனக்குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பம்அனுப்ப/ஒப்படைக்கவேண்டியமுகவரி:
**பிரதிப் பதிவாளர்,
பரீட்சைகளும் அனுமதிகளும்
யாழ் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்**

**பதிவாளர்.**

26-07-99

சி/8321)

---

# கப்பலில் தபால் பொதிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 28

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் 225 தபால் பொதிகள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கப்பலில்யாழ்ப்பாணத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கான 43 தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-5)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ். பல்கலைக்கழக வெள்ளி விழா ஆண்டை முன்னிட்டு நடத்தப்பட்டு வந்த மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம், இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக மருத்துவபீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் வீ குணாநந்தம் கலந்து கொள்வார். (ஐ—ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ். பல்கலைக்கழக வெள்ளிவிழா ஆண்டை முன்னிட்டு பல்கலைக்கழக விளையாட்டு அவை இலங்கை வங்கியின் அனுசரணையுடன் நடத்தும் சதுரங்கப்போட்டிகள் இன்று புதன்கிழமை காலை 9 மணிமுதல் பல்கலைக் கழக நூலகக் கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன (ஐ—7)

★ ★ ★

அரியாலை, ஜூலை 28

அராலி ஏ. எல் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3. 30 மணியளவில் அராலி குலனையூர் மைதானத்தில் அரையிறுதிப் போட்டித் தொடரில் விளையாடும் அணிகள் வருமாறு:

★ திருநெல்வேலி ஒலிம்பிக் வி.க.எதிர் மானிப்பாய் றெட் றேஞ்சர் வி க

★ கொக்குவில் சன்ஸ்ரார் வி.க, எதிர் அராலி அண்ணா வி. க. அணி (இ—17)

# குரு பூர்ணிமா தன விழா

திருநெல்வேலி, ஜூலை 28

திருநெல்வேலியிலுள்ள யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் குரு பூர்ணிமா தின விழா இன்று புதன்கிழமை முற்பகல் நடைபெறவுள்ளது

காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இந்த விழாவில் யாழ். மாவட்ட கல்வி நிர்வாக இணைப்பாளர் ச. நா. தணிகாசலம் பிள்ளை ''கல்வியும் ஆத்மீகமும், என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்துவார்.

பண்ணிசைப் புலவர் வே. சிவஞானத்தின் பண்ணிசையும், பஜனை, மங்கள ஆராத்தி, மதிய உணவு நாராயண சேவை ஆகிய பல்வேறு நிகழ்வுகளும் விழாவில் இடம்பெறும். (இ-135)

# முத்திரைகள் வந்தன

யாழ்ப்பாணம், ஜூலை 28

பெறுமதி வாய்ந்த முத்திரை வகைகள் கொழும்பிலிருந்து யாழ். தபாலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஆயிரம் ரூபா 500 ரூபா, 50 ரூபா, 100 ரூபா பெறுமதியான முத்திரைகளே அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக யாழ். பெரும்பாக அஞ்சல் அத்தியட்சகர் [illegible] தர்மராஜன் தெரிவித்துள்ளார். [ஐ-5-க]

---

# ஏல விற்பனை

எமது சங்கத்தில் உள்ள புடைவை வகைகள்

31—07—99 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு சங்கத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

பொது முகாமையாளர்
**மானிப்பாய், பலநோக்கு கூ. சங்கம்.**

[சி/8323]

---

**சாவகச்சேரி - டச் வீதி**
**அருள்மிகு**

# ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலய 8 ஆவது

# ஸ்ரீ பழநி வேல் பவனி

**28 - 07 - 1999 புதன்கிழமை**
**நண்பகல் 12-00 மணி**

பிரதம விருந்தினர்:
பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்
(தலைவர், இந்துநாகரிகத்துறை யாழ். பல்கலைக்கழகம்)

காவடி, கரகாட்டம்
கும்மி, கோலாட்டம்,
போன்ற கலாசார நிகழ்வுகளுடன் பழநி முருகன் நகர் வலம் வருவார்.

(67740)

**- பரிபாலனசபை**

---

# வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்

# கேள்வி அறிவித்தல்

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த உற்சவ காலங்களில் கீழே குறிப்பிடப்படும் பாதுகாப்பு நிலையங்களை அமைத்து நடத்துவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

1 **துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம்**

2. **மோட்டார் சைக்கிள், மோட்டார் வாகனங்கள் பாதுகாப்பு நிலையம்.**

அலுவலகத்தில் மீளளிக்கப்படக் கூடியதான கேள்விப் பணமாக ரூபா 500 யையும், படிவக் கட்டணமாக ரூபா 50 யையும் 30—07—1999 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தியதன் பிரகாரம் வழங்கப்படும் படிவங்களில் விண்ணப்பம் தயாரிக்கப்பட்டு 03—08—1999 ஆம் திகதிக்கு முன்பதாக கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். 04—08—1999 காலை 11.00 மணிக்கு கேள்விகள் உடைக்கப்பட்டு பரிசீலனைக்கு எடுக்கப்படும்.

**நிபந்தனைகள்:**

1) விண்ணப்பங்களுடன் பாதுகாப்பு நிலையம் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட இடத்தினது மாதிரி வரைபடமும் உரிமையாளரின் எழுத்து மூலமான அனுமதிக் கடிதமும் இணைக்கப்படல் வேண்டும்.

2) ஆகக் குறைந்த கேள்வித்தொகையாக துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையத்துக்கு ரூபா.20,000 மும் மோட்டார் சைக்கிள் / வாகன பாதுகாப்பு நிலையத்துக்கு ரூபா.15, 000 மும் அமைத்திருத்தல் வேண்டும்.

3) வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத் தலைவரினால் பணிக்கப்படும் கட்டண விகிதங்களே அறவிடப்படல் வேண்டும்.

4) பாதுகாப்பு நிலையப் பாவனையில் விடப்படும் தொடரிலக்கங்களுடனான அச்சிடப்பட்ட சீட்டுக்களை அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டிருத்தல் வேண்டும்,

5) இக் காலங்களில் ஆலய சுற்றாடலின் சிவில் நிர்வாக ஒழுங்கமைப்பு தொடர்பாக வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் தலைவர் / செயலாளரினால் வழங்கப்படும் பணிப்புரைகளுக்கு அமைவாக செயற்படுதல் வேண்டும்.

6) கேள்விகளை ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் வல்வெட்டித்துறை நகராட்சிமன்றத் தலைவருக்கும் செயலாளருக்கும் உண்டு.

7) மேலதிக விவரங்களை கடமை நேரங்களில் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

சுப்பிரமணியம் சந்திரசேகரம்,
உபதலைவர்
**நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை.**

நகராட்சிமன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
2?—07—1999.

(சி-8322)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## முன்னோட்டமா?

ஆசிரியர்களுக்கான இடர்காலக் கொடுப்பனவு வழங்குவதில் சமவாய்ப்புக் கிடைக்க வேண்டும் என்று கேட்டு ஆசிரியர் தொழிற்சங்கங்கள் நடத்தி வரும் மறியற் போராட்டம் நேற்றும் தொடர்ந்து திருகோணமலையில் நடைபெற்றது.

இது விடயத்தில் அரசாங்கமோ, வடக்கு—கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சோ தமது நிலையிலிருந்து இறங்கி வந்து நியாயம் வழங்க முற்படுவதாக இல்லை. பதிலாகத் தமது நடவடிக்கை சரியானதே- மாற்ற முடியாததே என்று நியாயப் படுத்தும் முனைப்புடனேயே செயற்படுகின்றன.

கல்வி அமைச்சர் தலைமையில் கொழும்பில் நடைபெற்ற மாநாட்டில், அம்பாறை மாவட்டத்தில் உள்ள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு இடர்காலக் கொடுப்பனவை முழுமையாக (வருடம் முழுவதற்கும்) வழங்குவதற்கென 2 கோடி 80 லட்சம் ரூபாவை ஒதுக்கவும், மிகுதி 12 கோடி 20 லட்சம் ரூபாவை வடக்கு - கிழக்கின் எட்டு மாவட்டங்களையும் சேர்ந்த தமிழ்—முஸ்லிம் ஆசிரியர்களுக்கு ஒதுக்கவும் முடிவாகியது.

''அடுத்த மாதத்தில் (ஒகஸ்டில்) மிகுதிப் பணம் கிடைக்கும் தானே'' என்று கூறிச் சம வாய்ப்பு வழங்காது பாரபட்சம் காட்டுவதை நியாயப் படுத்த முனைவது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல.

இடர்காலக் கொடுப்பனவு வழங்குவது வடக்கு — கிழக்கு மாகாண சபையின்பணி. பெரும்பான்மை இனத்தவருக்கு முழுமையாகக் கொடுத்த பின்னர் மிகுதியையே தமிழ் முஸ்லிம் ஆசிரியருக்கு வழங்கவேண்டும் என்பது மாகாண சபையின் செயற்பாடுகளில் மத்திய அரசு தலையிட்டு ''உறுக்கி''க் கூறும் போக்காகும்.

ஆசிரியர்களுக்கான கொடுப்பனவில் இவ்வாறு இனப்பாகுபாடு காட்டினால் அரசாங்கம் தமிழர்கள், முஸ்லிம்களுக்கு சம வாய்ப்பும் சம அந்தஸ்தும் வழங்கும் என்று எவ்வாறு நம்புவது?

இனப்பிரச்சினைக்கு இந்த அரசின் பதவிக் காலத்தில் தீர்வு காணப்படும் சாத்தியம் இருப்பதாகத் தமிழர்கள் எவரும் இப்போது எதிர்பார்க்கவில்லை. பெரும் அதிசயமாக அது நடைபெற்றாலும் கூட, சிங்கத்துக்குப் பெரும் பங்கு ஏனையோருக்குச் சிறிய துண்டுகள் என்ற சிறுவர் கதை போன்றே தீர்வு அமையும்.

இதனையே ஆசிரியர் இடர்காலக் கொடுப்பனவின் தலையீடும் உத்தரவும் உள்ளூர உணர்த்துகின்றன. இதுவே தமிழர்நெஞ்சங்களில்இப்போது ஏற்படும் பதிவாகும்.

முன்னர் உண்ணாவிரதம் இருந்த போது சிங்கள ஆசிரியர் அதிபர்களுக்கு வாக்குறுதி வழங்கப்பட்டதால் அதிலிருந்து வழுவ முடியாது. ஆனால் தமிழ், முஸ்லிம் ஆசிரியருக்கு பாரபட்சம் காட்டலாம் என்பது என்ன நீதி அல்லது என்ன நியாயம்?

தமிழ், முஸ்லிம் ஆசிரியர்களுக்கு இப்படி ஓர் உறுதிமொழி தந்திருந்தால் ஒரு விநாடியில் அதனை அரசு காற்றில் பறக்கவிட்டிருக்காதா? பின்னர் அதனைச் சமாளித்துச் சமாதானம் கூறவும் முற்பட்டிருக்குமல்லவா?

இடர்காலக் கொடுப்பனவு விவகாரம் ஆசிரியர்கள், அதிபர்கள் சம்பந்தப்பட்டதாக இருக்கலாம். ஆனால் அரசு அதனைக் கையாளும் விதம் தமிழர் பிரச்சினையில் எவ்வாறு நடந்து கொள்ளும் என்பதனை முன்னோட்டம் காட்டுவதாகக் கொள்ள வேண்டி உள்ளது.

# சுவாமி சச்சிதானந்தரின் குருசேவை
# ஐம்பதாண்டு நிறைவு விழா இன்று

''ஆச்சாரியான புருஷோவேத் குருவை அடைந்தவனே வேதங்களைக் கற்றுணர்ந்தவன்''. இவ்வாறு வேதங்கள் இயம்புகின்றன. ஆதலால் ஆத்மீக மார்க்கத்திற்கு குரு மிகவும் இன்றியமையாதவர் குரு மூலம் பெற்ற ஞானமே பூரணத்துவம் பெற்றதாகின்றது.

1914 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 22 ஆம் திகதி தமிழ்க்கலை கோயம்பதியில் கல்யாணசுந்தரம்பிள்ளை தம்பதிகளுக்கு மகனாக இராமசாமி அவதாரம் எடுத்தார். கற்கவேண்டியவற்றை கற்று தொழில் புரிந்து மணவாழ்க்கையில் ஈடுபட்டு இரு குழந்தைகளின் தந்தையாகிய இராமசாமியை ஆன்மீகப் பணியில் ஈடுபடுத்த திருவருள் திருஉளம் கொண்டு பந்தபாசங்களைக் களையத் தூண்டியது. மனைவியை இழந்த இராமசாமி குழந்தைகளை தமது பெற்றாரிடம் ஒப்படைத்து, தொழிலையும் துறந்து ஆன்மீகக் குருவைத் தேடி யாத்திரை செய்தார்.

இமய ஜோதியாய் சுவாமி சிவானந்தரை அடைந்தார். குரு சேவையே சிறந்த சேவையென ரிஷிகேசத்தில் வாழ்ந்து வந்தார். அவரைச் சுவாமி சிவானந்தர் தனதுசீடராக்கிக் கொண்ட நாளே 1949 ஆம் ஆண்டு ஆடி மாதம் பௌர்ணமியாகும் சுவாமி சச்சிதானந்த எனும் பெயருடன் பணி செய்தவர். இலங்கை மக்களுக்குச் சேவை செய்ய அனுப்பப்பட்டார்.

திருகோணமலையில் சிவானந்த ஆச்சிரமத்தில் சேவை செய்தவர் கண்டி மக்களின் ஆன்மீக அன்பால் கவரப்பட்டு தென்னக்கும்பரவில் போவனம் அமைத்துப் பணி செய்து வந்தார் அவ்வேளை அமெரிக்க அன்பர்களின் அன்புக்கு அடிபணிய வேண்டியவரானார்.

### ''பாக்கியவதி''

இலங்கையில் திவ்ய ஜீவன சங்கக் கிளைகளை நிறுவியவர் 1966 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அமெரிக்கா சென்று பூரணயோக சமாஜம் அமைத்து வெளிநாடுகளில் பல கிளைகளை நிறுவி, உலகம் முழுவதும் யோகக் கலையைப் பரப்பியதுடன், அமெரிக்காவில் தாமரைக் கோயிலை அமைத்து பல ஆச்சிரமங்களையும் ஸ்தாபித்துள்ளார். பலகோடி மக்களை ஆன்மீகப்பணியில் ஈடுபடுத்துவதற்காக பல நாடுகளிலும் பூரணயோக சபாஜக் கிளைகளை ஸ்தாபித்துள்ளார்.

''ஒன்றே தெய்வம், உண்மை அதன் உரு உணர்ந்தோர் பலர் உரைப்பவர் தாமே.

மனதை வென்றவன் மன்னர்க்கு மன்னன்
மனத்தூய்மையே மதங்களின் முதற்படி
ஆசையே துன்பங்கள் அனைத்திற்கும் ஆணிவேர்
இன்பம் போன்று துன்பம் நிறைந்தது உலகம்
இன்பங்களில் பற்றுவையாதவன் விவேகி
பற்று அறுத்த ஞானியைத் தேடி வரும் செல்வம்

இவை அவரது அருள் வாக்குகளில் சில.

யோகிராஜசுவாமி சச்சிதானந்தர் அன்பால் மக்களை ஆன்மீகப்பாதையில் இட்டுச் செல்கிறார். அவரது அடியார்கள் அனைவரும் குரு சேவையில் தன்னை அர்ப்பணித்த சுவாமிகளுக்கு இன்று ஆடிப்பூரணையன்று பொன்விழா எடுத்து தங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றார்கள். அவரது தொண்டும் பணியும் மேலோங்குக.

★

## எழுத்தாளர் மண்டபத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ். ஆரியகுளம், பருத்தித்துறை வீதியில் உள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் புனரமைக்கப்பட்ட மண்டபத்தின் திறப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3. 30 மணிக்கு நடைபெறும்.

இன்றைய விழாவில் ஒன்றியத்தின் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து ஆராயப்படவுள்ளதால், ஒன்றியத்தில் புதிதாக இணைய விரும்பும் இளம் கலை இலக்கியப் படைப்பாளிகளையும் சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (க)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 28

திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் சனசமூக நிலைய கலைமகள் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப்போட்டிஇன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சனசமூக நிலைய முன்றலில் தலைவர் திருமதி நாகபூஷணி சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்த விழாவில் முதன்மை விருந்தினராக உதவிக்கல்விப் பணிப்பாளர் (முறைசாரக் கல்விப்பிரிவு) திருமதி போ. யோகராசா கலந்து கொள்வார். (இ)

# எமது இருக்கையை தெளிவுபடுத்தும்
# தேவை இப்போது மிக அவசரமானது

## வரலாற்று நூல் வெளியீட்டில் வலியுறுத்து

நல்லூர், ஜூலை 28

இன்றைய துன்பங்களுக்கு எம்மிடம் வரலாற்று அடிப்படை உணர்வு இல்லாமையே காரணமாகும். எங்களது இருக்கை பற்றித் தெளிவாகச் சொல்லமுடியாத நிலை இருக்கிறது. பழைய ஆவணங்கள் தரவுகளைப் பெற்று முழுமையான வரலாற்றைத் தெளிவுபடுத்த வேண்டிய அவசர தேவை உண்டு.

''தொல்லியலும் தமிழர் பண்பாடும்தொன்மைகளும்'' என்ற நூலின் வெளியீட்டு விழாவின் போது அதன் நூலாசிரியரான யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறை விரிவுரையாளர் செ. கிருஷ்ணராசா மேற்கண்டவாறு சொன்னார்.

பிரஸ்தாப வெளியீட்டு விழா பல்கலைக்கழக வரலாற்றுக் கழகத்தினர் சார்பில் அதன் தலைவர் எஸ். சத்தியகுமார் தலைமையில் நூலக கேட்போர் கூட்டத்தில் நடைபெற்றது. நூலின் முதற்பிரதியை துணைவேந்தர் பொ. பாலசுந்தரம் பிள்ளையிடம் இருந்து முன்னாள் சமஸ்கிருதப் பேராசிரியர் வி. சிவசாமி பெற்றுக் கொண்டார்.

நூலாசிரியர் தமது உரையில் —

எமது வரலாறு குறித்த தடயங்கள் குறிப்பாக 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தோம்புகள் இந்திய அமைதிப்படையால் தேநீர் வைப்பதற்கு விறகாகப் பயன்படுத்தப்பட்டன.

இடப்பெயர்வின் போதும் ஏராளமான வரலாற்றுத் தரவுகள் அழிந்து விட்டன. கந்தரோடை, நல்லூர் போன்ற இடங்களில் அனேக பொருள்கள் எடுக்கப்பட்டிருந்தாலும் அவை குறித்த சரியான முடிவுகள் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை —

யாழ்ப்பாண மக்கள் ஆங்கிலேயர் காலத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து வந்தவர்களல்லர். எங்களது இருக்கை பற்றித் தெளிவாகச் சொல்ல முடியாத நிலையில் இன்று இருக்கிற பழைய ஆவணங்கள் தரவுகளைப் பெற்று முழுமையான எமது வரலாற்றைத் தெளிவுபடுத்த வேண்டும் — என்றார்.

யாழ். பல்கலைக்கழக உயர் பட்ட ஆய்வுகள் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் பேசும்போது கூறியதாவது:-

பேராசிரியர் இந்திரபாலா ஆராய்ச்சி செய்த போது எமக்கு மகிழ்ச்சி. அப்போது எமது வரலாறு குறித்த தடயங்கள் கிடைத்தன. இன்று அவை அழிந்து விட்டன. சொல்லியல் கற்கை விஞ்ஞான ஆய்வுடையது. பழைமையை மீட்டுருவாக்கம் செய்வது இதில் ஈடுபடுபவர் எடுத்த எடுப்பில் முடிவுகளைச் சொல்ல முடியாது பல தரவுகளைப் பார்த்தே முடிவுகளைக் கூறமுடியும் எனவே இதில் ஈடுபடுபவருக்கு மிகவும் அவதானம் தேவை.

யாழ், பல்கலைக்கழகம் ஆனைக்கோட்டையில் மேற்கொண்ட ஆய்வில் பெருங்கற்பண்பாட்டுச் சான்றுகள் காணப்பட்டன. பெருங்கற் பண்பாடுகள் மன்னார் பொன்பரப்பிப் பகுதிகளில் தான் இருந்தது என்ற எண்ணம் இதனால் மாற்றமடைந்தது. வழுக்கியாறு எமது பெரிய பாரம்பரியத்தையுடையது. அதுபற்றி விரிவாக ஆராயப்படவேண்டும்.

வரலாற்று நம்பகத்தன்மை நேர்மை ஆகியவற்றை இந்த நூலில் காணலாம். பிரபல தொல்லியலாளர் ஐராவதம் மகாதேவன் இவரைப் பாராட்டியுள்ளார். இந்த நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தால் உலகம் எங்களது வரலாற்றை அறிய உதவும்—என்றார்.

யாழ். பல்கலைக்கழகஇந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபால கிருஷ்ண ஐயர் தமது மதிப்பீட்டுரையில் கூறியதாவது.

தென்கிழக்காசியாவின் பெரிய நூலகமான யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிக்கப்பட்டபோதும் இடப்பெயர்வு காரணமாகவும் போரினாலும் வரலாறு தொடர்பான ஆவணங்கள் எமது பண்பாட்டின் அடித்தளமான ஆலயங்கள் என்பன அழிவுக்குட்பட்டன. எமது முன்னோர்களின் அடித்தளம் பற்றி அறிந்தால் தான் நாம் எப்படி வாழ்கின்றோம் என்பதை உணரமுடியும்.

எமது மக்கள் விட்டுச் சென்ற தொல்லியல் எச்சங்களைக் கொண்டு மிகக் கவனமாக அவற்றில் உள்ள தரவுகளைப் பெற்று எழுத வேண்டும் என்பதால் பல்வேறு நிலைகளிலும் கிடைத்த ஆவணங்களைக் கொண்டு கந்தரோடையாழ். நல்லூர் பிரதேசம் இரண்டினதும் பண்பாட்டுக் கூறுகளை எழுத தனது ஆய்வுகளைப் பயன்படுத்தியுள்ளார். பொலனறுவையில் உள்ள சிலதெய்வங்கள் எமது பண்பாட்டை எடுத்துக் கூறுவதாக உள்ளன. சிங்கள நூல்களில் சொல்லப்படும் சில விடயங்களும் காணப்படுகின்றன. பரணவிதான நாகர்களைப் பற்றிக் கூறிய தவறான கருத்துக்களை மறுக்கத் தயங்காத ஆசிரியர் தென்நாட்டிற்கும் எமக்குமுள்ள தொடர்புகள் பற்றியும் சிந்தித்துள்ளார்.

பௌத்தர்கள் மகாவம்சத்தை வைத்துக்கொண்டு மத உணர்வுகளை ஊட்டி வருகிறார்கள். இந்த நிலையில் எமக்குரிய வரலாறுகளை நாம் தெரிந்து வைக்க இந் நூல் உதவுகிறது என்று சொன்னார்.

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ் சத்தியசீலன் பேசும்போது கூறியதாவது:—

எமது இருப்பையும் பாரம்பரியத்தையும் நிலை நாட்டும் வகையில் மிகப் பெரிய ஆய்வுகளை மேற்கொண்டுகிருஷ்ணராசா இந்த நூலை ஆக்கியுள்ளார். கந்தரோடை வல்லிபுரக் கோயில் பகுதிகளில் இருந்து சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பொருள்களை இங்கு கொண்டு வந்தார். அவை அழிந்து விட்டன.

அரசியல் காரணங்களால் எமது தொல்லியல் சான்றுகள் அழிக்கப்பட்டு வருகிறன. இந்தப் பல்கலைக்கழகம் இந்தப் பிராந்தியத்தின் செயற்பாடுகளை நிலை நிறுத்த வேண்டும். சிங்கள பௌத்தர்கள் பாளி நூலை மையமாகக் கொண்டு ஆய்வுகள் செய்ததுடன் தமிழர்களை நிராகரித்தார்கள் கி. மு. ஆயிரம் ஆண்டுக்கு முற்பட்ட வரலாறு எங்களுடையது. புதிய விடயங்களை அறிவதில் மிகுந்த ஈடுபாட்டுடன் ஆசிரியர் இதனைத்தந்துள்ளார் — என்றார்.

(அ-111)

## நாளை

ஆடி 13

வியாழக்கிழமை

திதி: பிரதமை
மாலை 5.56 வரை.

நட்சத்திரம்: திருவோணம்
பிற்பகல் 5.04 வரை,

சுபநேரம்: 7.33—9.03

ராகுகாலம்: 1.83—3.03

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

அன்பினால் ஒருவனுடைய உள்ளம் நெகிழ்ச்சி அடையுமாறு செய்து அவன் வழியே நடந்து அவனால் காரியத்தை முடித்துக் கொள்ளுதல் சிறந்தது.

— அரியனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப் பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

### தெல்லிப்பழை

எம். வாசுகி (091796ஏ), எம். மேகலா (102049ஏ), எஸ். நாகம்மா (102109ஏ), பீ.திமோத்தேயு(103260ஏ), ஏ. சுப்பையா (103306ஏ), எஸ். பிறேம்குமார் (103357 ஏ), கே. பிரதீபன் (103376 ஏ), கே. கிரிஜா (103376பீ), என். நடராசா (103393ஏ), என். சசிகலா (103393ஏ), கே. ராஜரட்ணம் (103512 ஏ), ஆர். இந்திராவதி (103512பீ), ஏ. யசிந்தா (103573ஏ), ஏ.எம். வஜினிே (103573பீ), கே. கே. நகுலேஸ்வர (103585ஏ), கே. சிறிதரன் (103656ஏ), கே. கனகரத்தினா (103683ஏ), ஏ. பத்மநாதன் (103709சீ), பீ. ரஜீவன் (103709டீ), பீ. செல்வசந்திரன் (103709 ஈ), எஸ். பத்திநாதன் (103709எவ்), டபிள்யூ. ஏ. ஜெயதிலக (105032ஏ), டபிள்யூ. ஏ. ஜெயதிலக (105032பீ), எஸ். சிவபரன் (105115ஏ), எம்.தேவதாசா (105123ஏ), எம். சாமுவேல் (105207ஏ), ஜே. பிரதீபன் (105207பீ), எஸ். சோதிமணி (105207சீ), எம். அருமைநாயகம் (105283ஏ), ஏ. இந்திராணி (105283பீ), ஏ. சயேந்திரன் (105283சீ), பீ. திலோகநாயகம் (105324 ஏ), ரீ. பிரியவதன் (105324 பீ), எஸ்.சண்முகம் (106124 ஏ), எஸ், சுப்பிரமணியம் (108673ஏ), எஸ். சிவவதனி (108673பீ), வீ. மகேந்திரன் (108682ஏ), டீ. மகேந்திரன் (108682பீ), என். ஜெயரஞ்சன் (108959ஏ), எஸ். நாகேஸ்வரி (109013ஏ), கே. பொத்தபிள்ளை (109082ஏ). பீ. ஆச்சிப்பிள்ளை (109083 ஏ), எஸ். ராஜேந்திரா (109085ஏ).

### சண்டிலிப்பாய்

கே. சிவஞானம் (064943 ஏ), எஸ். தில்லைநாதன் (091578ஏ), என். வீ. தேவி (097360ஏ), ரீ. குணதீசன் (097860பீ), கே. சுரேஷ் குமார் (097392ஏ), வீ.தர்மசிங்கம் (099089ஏ), ரீ. பரமநாதன் (099259ஏ), என். சின்னத்துரை (099259பீ), செல்வராசா (099684ஏ),

எஸ் தயாகரன் (099684 பீ), எஸ்.புஸ்பலதா (099684 சீ), கே. புஸ்பராணி(100127 ஏ), கே. சிறீஸ்கந்தராசா (100150ஏ), கே. கச்சாசிகம் (101405ஏ), டபில்யூ. லட்சுமணன் (101969ஏ), வீ. சிவனேஸ்வரி (102108ஏ), ஏ. திருச்செல்வநாயக (102151 ஏ),

ஏ. வில்சன் சந்திரதாஸ் [102152ஏ], ஆர். ராமசாமி [102159ஏ], ஆர். வரதராசா [102159பீ[, ஆர். விஜயமாலா [102159சீ], எஸ். பாக்கியம் [102160ஏ], தம்பிமுத்து [102185ஏ], பீ.குணரத்னராசர [102185 பீ], யீ. குகன் [102185சீ], ஏ. யீ.சத்தியரூபன் [103290 ஏ],

ஏ. அன்னம்மா [103290 பீ], எம். அல்போன்சு [103336ஏ], எஸ். கணபதிப்பிர்ளை [103344ஏ], ஆர். செல்வநாதர் [103405ஏ], வீ. பிரான்சிஸ்கர் [103436 ஏ], வீ. சஞ்சீவன் [103436 பீ], வீ. அஜந்தா [103436 சீ], வீ.பிரசன்னா [103436 டீ], வீ. உஷாழினி [103436 ஈ], ஆர். விஜயகுமார் [103453ஏ], பீ. கே. ரவீந்திரன் [103457ஏ],

வை. சிவசெல்வம் (103494 ஏ), யே. யே. சிவசெல்வம் (103494பீ), எஸ். சஞ்சீவம் (103494சீ), எஸ். பாகிரா (103494டீ). ஆர். ரஞ்சிதம் (103502ஏ), டீ. அருந்தவன் (103556ஏ), டீ. விக்னேஸ்வரன் (103556பீ), ரீ தர்மசேனா (103584ஏ), ரீ. சதீஸ்குமார் (103584பீ), எஸ், ராதாகிருஷ்ணன் (103622 ஏ).

எம். கனகலிங்கம் (103628 ஏ), ரீ. பூமன் (103628பீ), கே. யோகராஜ் (103628சீ), வை. அமுதினி (103628டீ), ஆர். செல்லையா (103658 ஏ), எஸ். எஸ். கார்த்திகேசு (103658பீ),ஆர்.ரதி(103658 சீ), பீ. நாகேந்திரன்(103666 ஏ), என்.நல்லைமகள்(103666 சீ), பீ. நாகபூசணி (103673 ஏ).

பீ. ரமணன் [103673பீ], எஸ். முத்துராஜா [103685 ஏ], எஸ். வைரவந்தர் [103717ஏ], எஸ். தர்மலிங்கம் [105101ஏ], டீ. தர்மமுத்து [105101பீ] சீ. ஈ. ரஞ்சிராஸ் [105131ஏ]. வீ. கே. அன்ஜனா [105161ஏ], வீ. கே. மோகன் [105161 பீ], பீ. அஜிதா [105162 ஏ], ரீ. ஹரீந்திரம் [105171 ஏ].

எச். தனோஜினி [105171 பீ], எம். சிவகுமார் [105185 ஏ], எஸ். ராஜசூரியர் [105200ஏ], ஏ. டீ. ராஜசூரியா [105200பீ], கே. முத்தையா [105205ஏ], கே. முத்தையா [105205பீ], கே. பாலசுந்தரம்மா [105221ஏ], எஸ். சனுமதி [105225ஏ], பீ. உதயராசா [105245].

வை.சிவகுமார் (105251 ஏ), ஏ. வேலுப்பிள்ளை (105260ஏ), எம்.தங்கராசா (105264ஏ), வீ. புலேந்திரராசா (105284ஏ), கே. ரதிமலர் (105284பீ), கே. கசிந்தினி (105284சீ), என். செல்லத்துரை (105320ஏ). என். வடிவாம்பிகை (105320 பீ), என்.சண்முகசெல்வி (105320 சீ), பீ.வரதராசா (105785 ஏ),எஸ்.வரதராசா (105785 பீ),

ஏ. ரஞ்சிதா (105812ஏ), ஏ.விநாயகமூர்த்தி (105841 ஏ),ரீ.விநாயகமூர்த்தி(105841 பீ),வீ.தவரூபன்(105841சி), வீ. ஷர்மிளா (105841டீ), ஆர். பஞ்சாட்சரம் (105989 ஏ), ரீ.சிறிராஜ் (106016ஏ), எஸ்.ஹரீதரன் (106016பீ), பீ. பாஸ்கரன் (106052ஏ), எம். பொன்னுத்துரை (106082ஏ), பீ. ஜெனிற்றா (106082பீ).

ஆர். பொன்னுத்துரை (106082 சீ), யூ. செல்லத்துரை( 106152 ஏ), யூ. கௌதமி (106152 பீ), எஸ். மகேந்திரன் (106169 ஏ), எம்.மகேந்திரன் (106169பீ), கே, வேலாயுதம்பிள்ளை (106180 ஏ), என். விக்னேஸ்வரன் (106197 ஏ), எஸ். தம்பிராசா (106201 ஏ), பீ. தம்பிராசா (106206 ஏ), என். விஜயமாலா (106241 ஏ), எஸ். தம்பித்துரை (108618 ஏ), எஸ். தம்பித்துரை (108618 பீ), எஸ்.கே. ரஞ்சனாதேவி (108626 ஏ), கே. ராஜரட்ணம் (108628 ஏ), பீ. சிவரூபன் (108638 ஏ), டபிள்யூ. சந்திரசேகரம் (108644 ஏ), பீ. சுந்தரராஜ் (108664 ஏ), என். சுந்தரராஜன் (108664 பீ), ஆர். சிவகௌரி (108811 ஏ). பீ. சோமசுந்தரம் (108816 ஏ).

கே. சுந்தரலிங்கம்(108827 ஏ). ஆர். சின்னத்தம்பி 108844 ஏ), பீ. குகதாசன் (108910 ஏ), வை. அந்தோனிப்பிள்ளை (108928 ஏ), ரீ. ரவிச்சந்திரன் (108940 ஏ), ஏ.கே சத்தியானந்தி 108963 ஏ,) எஸ். மாணிக்கதியாகராஜா (108977 ஏ), எம். சண்முகநாதன் (108989 ஏ ), ஆர். பெம்சன்(109003 ஏ ), கே. சிவராஜா (109020 ஏ), ஏ. சண்முகநாதன் (108989 பீ), கே. யோகராசா (109035 ஏ), எஸ். குழந்தை தம்பி (109084 ஏ), ஆர்.சுப்பிரமணியம் (10 087 ஏ), எஸ். சிவரூபன் (109103 ஏ),

(தொடரும்)


தென்புலோலி

## தான்தோன்றி சக்கர சண்முகரின் உபயகதிர்காமத் தேர் வெள்ளோட்டமும் தேர்த் திருவிழாவும்

தேர் வெள்ளோட்டம்:
28 – 07 – 1999 புதன்கிழமை
காலை 8-00 மணியளவில்

தேர்த் திருவிழா:
28 – 07 – 1999 புதன்கிழமை
காலை 10-00 மணியளவில்

பக்தர்கள் வந்து இருநிகழ்வுகளிலும் பங்குபற்றி சக்கர சண்முகரின் திருவருளைப் பெறுவீர்களாக.

– ஆலய புனருத்தாரண சபை

(67773)


## ஒன்றுகூடல்

யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையில் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல்பிற்பகல்2.30மணி வரை சாரணர் சிறுதோழர் ஒன்று கூடல் இடம்பெறும்.

அனைத்து சாரணர் சிறுதோழர்களையும் சமுகமளிக்கும் படி யாழ். மாவட்ட சாரணிய ஆணையாளர் கோரி உள்ளார். (இ)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 28 பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் செல்லையா மெற்றாஸ் மயில் எழுதிய இசைநாடகக் கூத்து ''மூத்த கலைஞர் வரலாறு'' எனும் நூல் வெளியீட்டு விழா இன்று புதன் கிழமை காலை 10.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் வலிகாமம் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சங்கீத பூஷணம் சு. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும்,

இந்நூல் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி பேராசிரியர். செ. பாலச்சந்திரன் வழங்குவார். (இ)


## கேள்வி அறிவித்தல்

### வலிகாமம் மேற்கு பிரதேச சபை - சுழிபுரம்

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சித் தலைவர் கௌரவ கே. என். டக்ளஸ்தேவானந்தா அவர்களின் முயற்சியால் கிடைக்கப்பெற்ற விசேட நிதி வேலைகள்.

அ) கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி — 05 - 08 – 99 பி. ப 15. 00 மணி வரை
ஆ) கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி — 06 – 08 – 99 நண்பகல் 12. 00 மணிவரை.
இ) கேள்வி திறக்கப்படும் திகதி — 06 – 08 – 99 பி. ப 15. 00 மணி வரை.
ஈ) கேள்விப் பத்திரங்களையும் மேலதிக விவரங்களையும் தலைமையலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| வேலை விவரங்கள் | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு |
|---|---|---|
| 01. நாவலர் சனசமூக நிலையக்கட்டடம் | 250. 00 | 1000. 00 |
| 02. அராலி கிழக்கு அம்பாள் சனசமூக நிலையம் | 200. 00 | 1000. 00 |
| 03. வட்டுக்கோட்டை சந்தை கட்டட திருத்தம் | 200. 00 | 500. 00 |
| 04. வட்டுக்கோட்டை சந்தை கூரை திருத்தம் | 200. 00 | 1000. 00 |
| 05. வட்டுக்கோட்டை சந்தை மலகூடம் அமைத்தல் | 300. 00 | 1000. 00 |
| 06. சுழிபுரம் வீரபத்திரர் சனசமூக நிலைய கட்டட திருத்தம் | 200. 00 | 1000. 00 |
| 07. சுழிபுரம் ஸ்ரீராம சனசமூகநிலையக் கட்டட திருத்தம் | 300. 00 | 1000. 00 |
| 08. சங்கானை ஸ்ரீபாரதி சனசமூக நிலைய கட்டட திருத்தம் | 300. 00 | 2000. 00 |
| 09. சரஸ்வதி சனசமூக நிலைய கட்டடம் | 300. 00 | 1000. 00 |
| 10. பனிப்புலம் சுடலை மடம் அமைத்தல் | 300. 00 | 1000. 00 |
| 11. சத்தியகாடு சந்தை மண்டபம் அமைத்தல் | 500. 00 | 3000. 00 |

தலைவர்.

[சி/8329]


## மண்ணில் இருந்து விண்ணுக்கு.

மண்ணில்
18
—
04
—
1916



விண்ணில்
28
—
07
—
1983

அமரர் பொன்னையா கதிரவேலு

வருடாந்த மதச்சடங்குகள் லண்டனில் 01—09—1999 இல் நடைபெறும்.

திருமதி P. கதிரவேலு

(67690)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் தவராஜா

(உரிமையாளர், லீலா ஸ்ரோர்ஸ், மூளாய் வீதி, வட்டுக்கோட்டை)

மொந்திபுலம் காரைநகரைப் பிறப்பிடமாகவும் வட்டு. தெற்கு வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தவராஜா 27-07-99 காலை காலமானார்.

அன்னார் செல்வராணியின் அன்புக் கணவரும் சுப்பிரமணியம்—சிவமணி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் செல்விகள் பாலதர்சினி, புஸ்பரஞ்சனா, சசீந்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவபாக்கியம், கனகராசா, செல்வராசா, சரஸ்வதி (பிரான்ஸ்), துரைராசா, காலஞ்சென்ற விமலாதேவி, வரதராசா, யோகராசா ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [28-07-99] புதன்கிழமை முற்பகல் 10மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
சுப்பிரமணியம்
(தந்தை)

வட்டு.தெற்கு,
வட்டுக்கோட்டை.

(67787)

## திருமதி மனோன்மணி இராஜசிங்கம்

உதயசூரியன் வீதி, உடுவிலைச் சேர்ந்த திருமதி மனோன்மணி இராஜசிங்கம் 27-07-99 அன்று காலமானார்.

அன்னார் ஆறுமுகம் இராஜசிங்கத்தின் அன்பு மனைவியும் கந்தையா சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகளும் கஜேந்திரன், விஜேந்திரன், வான்மதி, கோமதி ஆகியோரின் அன்புத் தாயாரும் தியாகராசா, தியாகரத்தினம், வசந்தராசா (டோகா), எடிசன், அருமைராசா ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-07-99) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ. இராஜசிங்கம்
(கணவர்)

உதயசூரியன் வீதி,
உடுவில்.

(சி/8332)

## கிளமென்ற்லோறன்ஸ் சேனாதிராஜா

(ஓய்வுபெற்ற ஆசிரியர், புனி பத்திரிசியார் கல்லூரி, யாழ்)

கிளமென்ற் லோறன்ஸ் சேனாதிராஜா (ஓய்வுபெற்ற ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்) அவர்கள் 26-7-99 திங்கட்கிழமையன்று தமது 93 ஆவது வயதில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற றெபேக்கா மதுரமணி லோறன்ஸின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும் புஷ்பதேவி லோறன்ஸ் (ஆசிரியை, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), Dr. ஆனந்தராஜா லோறன்ஸ் (Central Dispensary And Surgery) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் தேவிகராணி ஆனந்தராஜாவின் அன்பு மாமனாரும் Dr. எலிசத்துரை சைமன் (Pussellawa Medical Centre) அவர்களின் சிறியதகப்பனாரும் திலகராணி ஆனந்தராஜா (ஆசிரியை, பரியோவான் கல்லூரி), ஆனந்தராஜா சேனாதிராஜன் (மாணவன், ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (28-7-99) புதன்கிழமை பிற்பகல் 3.30 (புதிய நேரம்) மணியளவில் புனித மரியாள் சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr. ஆனந்தராஜா லோறன்ஸ்
(மகன்)
Medical Registrar,
Jaffna Town East.

41, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

(67782)

## வல்லிபுரம் நாகராசா

(சங்கானை சந்தை, பிரபல வியாபாரி)

சங்கானையைச் சேர்ந்த வல்லிபுரம் நாகராசா 27-07-99 இல் காலமானார்.

அன்னார் வசந்தாதேவியின் அன்புக் கணவரும் ஜீவகாந்தன், லாகினி, ரவீந்திரன், ஜெயகாந்தன், சுபாஜினி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் தவமணிதேவி, தங்கராசா, தம்பித்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் மயூரன், சுதர்சன், தர்சன், அருந்ததி, தர்சிகா, நிசாந்தினி, கஜந்தினி, தமிழினி, சரஞ்சா, டினோஜன், தர்சன், லதன், ஜீர்த்தனா ஆகியோரின் அன்புப் பேரனும் விசயராணி, உதயசாந்தி, சிறிலதா, சிவபாதம், ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சங்கானை பாரதி வீதியில் உள்ள அவரது 'மயூரன்' இல்லத்தில் இன்று (28-07-99) புதன்கிழமை நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 1 மணியளவில் சங்கானை கரச்சி மயானத்துக்குத் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. ஜெயகாந்தன்
(மகன்)

பாரதி லேன்,
சங்கானை.

(சி/8336)

# தமிழ் மக்களின் சுபீட்சத்துக்காக தன்னை அர்ப்பணித்தவர் கிருபா

## அஞ்சலி நிகழ்வில் சித்தார்த்தன்

யாழ்ப்பாணம், ஜூலை 28

''25 வருடங்களுக்கும் மேலாக தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துக்காக அயராது உழைத்து வந்தவர் அமரர் கிருபைராஜா''

இவ்வாறு அமரர் கிருபைராஜாவுக்குப் புகழாரம் சூட்டினார் நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் தலைவருமான த. சித்தார்த்தன்.

புளொட்டின் யாழ். தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற புளொட் யாழ். மாவட்ட அமைப்பாளர் செ. கிருபைராஜாவின் அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு உரையாற்றும்போது மேலும் கூறியதாவது:

''தமிழ் மக்களின் சுபீட்சமான வாழ்வுக்காகத் தன்னையே அர்ப்பணித்து வாழ்ந்தவர் கிருபைராஜா. யாழ் மக்கள் மட்டுமல்ல வன்னி, மட்டக்களப்பு, மலையக மக்களுடனும் மிகவும் அன்பாகப் பழகிவந்தவர் அவர். அவரின் ஆத்மாவுக்கு நாங்கள் செய்ய வேண்டிய உதவி யாதெனில் அவர் எடுத்துச் சென்ற இலட்சியத்தை முன்னெடுப்பதே ஆகும் என்று கூறினார்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினர் த. சுபத்திரன் உரையாற்றும் போது கூறியதாவது:-

தமிழரசுக் கட்சிக் காலத்தில் அரசியலில் பிரவேசித்து இடதுசாரிக் கருத்துக்களினால் ஈர்க்கப்பட்டு ஆயுதம் ஏந்திய போராட்டம் ஆரம்பித்த காலத்தில் புளொட் அமைப்பில் இணைந்து விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தவர் கிருபைராஜா.

கொலை அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும்மக்களுக்கு செய்யவேண்டிய கடமையில் பின்வாங்காது செய்துகொண்டிருந்தார் அவர். கிருபா மாஸ்டரின் பாதை விசாலமானது. கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டது.

யாழ். பிராந்தியத்தில் ஏனைய கட்சிகளுடன் இணைந்து மனித நீதிக்கான குழு என்ற பெயரில் ஸ்தாபன ரீதியில் பல நடவடிக்கைகளை முன்னெடுத்தார்.

யாழ். மாநகர சபையில் உறுப்பினராகப் பதவியேற்ற தன் பின்னர் கட்சிபேதமின்றி சபையின் நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் உதவியாக இருந்தவர்.

மாநகர சபையில் ஆற்றல் மிக்க பேச்சாளராக இருந்து சபையை வழிநடத்தியவர். சபையில் எந்த விடயம் எடுக்கப்பட்டாலும் அதில் தனது ஆழமான கருத்துக்களைத் தெரிவித்து ஆலோசனைகளை வழங்கிவந்தார்.

எங்கள் எல்லோருக்கும் நல்ல நண்பனாக, சகோதரனாக, உற்ற தோழனாக இருந்தவர். அவருடைய இழப்பு தமிழ் சமூகத்துக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்—என்று அவர் தெரிவித்தார்.

புளொட் அமைப்பின் அதிகாரபூர்வ ஏடான 'நாநிலம்' பத்திரிகையின் ஆசிரியர் ந. சிவஞானம் உரையாற்றும் போது கூறியதாவது:-

துப்பாக்கிக் குண்டுகள் குறிவைத்துக் காத்துக் கொண்டிருந்த வேளையில் கிருபா மாஸ்டர் இயற்கை மரணமடைந்துள்ளார்.

துப்பாக்கியால் சுடப்பட்டு ஒருதுரோகியாக பட்டம் சூட்டப்பட்டு அவர் கொல்லப்படவில்லை.

கிருபா மாஸ்டர் தமிழர்களுடைய நலன்களுக்கு எதிராகச் செயற்பட்டவர் அல்லர்—என்றார்,

அஞ்சலி நிகழ்வுக்கு தலைமைவகித்த சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா உரையாற்றும்போது கூறியதாவது:

கிருபா மாஸ்டர் 1981 இல் புளொட் அமைப்பில் இணைந்து பின்தங்கிய கிராமங்களுக்குச் சென்று மக்களை அணிதிரட்டியவர்; அன்பாகவும் பண்பாகவும் மக்களுடன் பழகியவர்.

அழிந்து போயிருக்கும் யாழ்ப்பாணத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதில் அவர் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

தமிழ் அமைப்புகள் ஒன்றுபடவேண்டும் என்று சொல்லுடன் மட்டும் நிற்காது செயலிலும் செய்து காட்டியவர். அவர் விட்டுச் சென்ற சுவடுகளை நாம் பின்பற்றுவதே அவருக்கு நாம் செய்யும் கைம்மாறு ஆகும்—என்றார்

வடபிராந்திய வகுப்புத் தொழிலாளர் சங்கத் தலைவர் எஸ். அருமைத்துரை த, வி. கூட்டுனி மாநகர சபை உறுப்பினர் செ. கந்தையன், யாழ். மாநகரசபை முன்னாள் பிரதிமேயர் த. திருநாவுக்கரசு, வடகிழக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் கிங்ஸ்லி றோபேர்ட் ஆகியோரும் நினைவஞ்சலி உரைகளை நிகழ்த்தினார்கள்

புளொட் உதவி அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ் இருதயராஜன் நன்றியுரை வழங்கினார்.

(உ-5-6)

# நந்திக்கு பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 28

திருநெல்வேலி பாலகதிர்காம ஆலயத்தின் ஏற்பாட்டில் பேராசிரியர் செ. சிவஞானசுந்தரத்தைப் பாராட்டிக் கௌரவிக்கும் விழா நாளை வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ. பஞ்சலிங்கம் தலைமையில் பாலகதிர்காமம் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

ஆலயத்தின்சார்பாக திவ்ய ஜீவன சங்கத்தின் தலைவர் க. கனகரத்தினம் பேராசிரியருக்குப் பொன்னாடை போர்த்தி தங்கப் பதக்கம் அணிவித்துக் கௌரவிப்பார். கவிமாமணி ந. வீரமணிஐயர் வாழ்த்துப்பா பாடி வழங்குவார். 'ஆன்மீக வாதியான நந்தி' எனும் தலைப்பில் பேராசிரியா ப. கோபாலகிருஷ்ண ஐயரும், 'வைத்தியத்துறையில் நந்தி' எனும் தலைப்பில் வைத்திய கலாநிதி இ. இராஜேந்திரப் பிரசாத்தும், 'இலக்கியத்துறையில் நந்தி' என்ற தலைப்பில் க. சொக்கனும் 'கலைத்துறையில்நந்தி' எனும் தலைப்பில் பேராசிரியர் அ. சண்முகதாஸும், 'சமூகவாதியாக நந்தி' எனும் தலைப்பில் கலாநிதி எஸ். சிவலிங்கராஜாவும் 'மா மனிதர் நந்தி' எனும் தலைப்பில் பிரம்மஸ்ரீ இ. சந்திரசேகரசர்மாவும் பாராட்டுரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

(க)

# களுத்துறையில் தேடுதல்; 10 பேர் கைதாகி தடுத்துவைப்பு

கொழும்பு, ஜூலை 28

களுத்துறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் படையினர் நடத்திய திடீர் தேடுதலின் போது 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்

களுத்துறை ஜாவத்தைப் பகுதியிலுள்ள —விடுதலைப் புலிச் சந்தேக நபர்களைத் தடுத்து வைக்கும் — சிறைச்சாலையின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் நோக்குடனேயே இந்தத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும்—

கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் பதுளை, கதிர்காமம் மற்றும் மொனராகலைப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும்—

களுத்துறைப் பொலீஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் களுத்துறைப் பிரதேசங்களில் நடமாடுவது குறித்த பொலீஸ் பதிவுச் சான்றிதழ்களை வைத்திருக்கவில்லை எனவும் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

(உ-7-8)

# சம்பந்தன் விருது இவ்வாண்டு 'தமிழின்பாவடிவங்கள்' நூலுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 28

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி அமரர் சி. கணபதிப்பிள்ளை நினைவாக ஆண்டுதோறும் வழங்கப்படும் 'சம்பந்தன் விருது' பேராசிரியர் அ. சண்முகதாஸ் எழுதிய 'தமிழின் பாவடிவங்கள்' என்ற நூலுக்கு வழங்கப்படவுள்ளது.

கடந்த வருடம் ஈழத்து அறிஞர்கள் பலரால் எழுதப்பட்டு வெளிவந்த கலை, இலக்கிய சமய நூல்களைப் பரிசீலனை செய்த 'சம்பந்தன் விருது' வழங்கும் சபையினர் கடந்த ஆண்டுக்குரிய சிறந்த நூலாக 'தமிழின் பாவடிவங்கள்' என்ற நூலைத் தெரிவு செய்துள்ளதாக அதன் இணைப்பாளர் கலாநிதி க. குணராசா அறிவித்துள்ளார்.

ஈழத்தின் முன்னோடி எழுத்தாளர் அமரர் சம்பந்தன் குடும்பத்தினர் இந்த விருதினை ஆண்டுதோறும் வெளிவரும் சிறந்த கலை, இலக்கிய, சமய நூலுக்கு வழங்குவதற்கான நிதியத்தை வழங்கியுள்ளனர் எனவும் அவர் மேலும் அறிவித்துள்ளார்.

செப்ரம்பர் மாத இறுதியில் சம்பந்தன் நினைவுக் கூட்டத்தில் கடந்த ஆண்டின் சிறந்த நூலை எழுதிய பேராசிரியர் அ. சண்முகதாஸ் விருதும் பணமுடிச்சும் வழங்கிக் கௌரவிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ 7)

# 2 புலிகள் உயிரிழப்பு

வவுனியா, ஜூலை 28

வன்னிப் பகுதியில் நேற்றும் நேற்று முன்தினமும் இடம்பெற்ற இருவேறு சம்பவங்களில் தமது தரப்பில் இருவர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

ஒட்டுசுட்டான் பகுதியில் நேற்றைய தினம் படையினருடன் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் கப்டன் நம்பி (தம்பிராசா நேசராசா — யாழ்ப்பாணம்) என்பவரும் —

நேற்று முன்தினம் வன்னியில் தவறுதலாக இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் நேந்தலா (முத்துப்பிள்ளை புஸ்பராணி — மட்டக்களப்பு) என்பவரும் உயிரிழந்ததாகப் புலிகளின் குரல் நேற்றிரவு தெரிவித்தது.

(உ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 ஆம் ஆண்டு நினைவில்



அமரர்

**வல்லிபுரம் வள்ளியம்மை**

(வட்டுக்கோட்டை மேற்கு)

அன்னை மடியில்: 19-09-1920 முருகன் அடியில்: 19-07-1997

திதி: ஆடிப் பூரணை

இன்று போல் இருக்கிறது உங்கள் பிரிவு — ஆனால்
என்றும் மறவா நினைவுகள் நிழல் போல்
வாழ்வாங்கு வாழ்ந்து வழிகாட்டிய மகிமை
மாளாது மனதில் புத்துயிர் தருகிறது தாயே!

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

28, கைலாசபிள்ளையார் கோயில்
மேற்கு வீதி,
நல்லூர். (சி/8334)



## மீண்டும் விற்பனைக்கு

| | | |
|---|---|---|
| சுப்பர் கப் | 50 — | ஹொண்டா |
| லான்சர் | 50 — | ஹொண்டா |
| யமாகா | 50 — | லான்சர் |
| யமாகா | 90 | |
| M D. | 90 — | ஹொண்டா |
| SONY T. V. | | 21" |
| S. R. | 38 — | டெக் |

என்பனவற்றை ஒரே இடத்தில் பெற்றிட நாடவேண்டிய இடம்:

**ஸ்ரீ முத்துமாரி அம்மன் ரேடர்ஸ்**

இல. 171, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (67774)



## நல்லூர் லயன்ஸ் கழகத்தின்

10 ஆவது ஆண்டு நிறைவு விழாவும்
புதிய நிர்வாகப் பதவி ஏற்பு வைபவமும்
1999 - 2000

காலம்: இன்று 28 - 7 - 1999 புதன்கிழமை
காலை 10. 00 மணி

இடம்: Y. M. C. A. மண்டபம்

பிரதம விருந்தினர்:
லயன் ஐ. தங்கேஸ்வரன்
(பிராந்தியத் தலைவர் — பிராந்தியம் 10)
லயன் சீமாட்டி திருமதி த. றஞ்சினி

— தலைவர்

விளம்பர அன்பளிப்பு:

**சீமாட்டி புடைவைக்கடல்**

122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T. P. No 021 - 2196
(சி/8333)


### மட்டக்களப்புக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்)

இடம்பெற்றதை அடுத்து அவை செயலிழந்தன.

நாளையும் நாளை மறுதினமும் இந்தப் போராட்டம் திருமலை, மட்டக்களப்பு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் இடம்பெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3-21)

### யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்)

கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் கேட்டுள்ளார்.

அவர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் வருமாறு:-

★ வன்னி மக்கள் எதிர்நோக்கும் போக்குவரத்துப் பிரச்சினைக்கு முன்னுரிமை கொடுத்து போக்குவரத்துப் பாதை ஒன்று திறக்கப்பட வேண்டும்.

★ வன்னிக்கு போதியளவு உணவு மற்றும் மருந்துப் பொருள்களை அனுப்பி அங்கு பட்டினிச்சாவு ஏற்படாமல் தடுக்க வேண்டும்.

★ எதிர்வரும் 2 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையை தவறாது வன்னியிலும் நடத்தவும் அங்குள்ள மாணவர்களுக்கு சமநிலையும் சமவாய்ப்பும் கிடைக்கவும் ஆவன செய்யப்பட வேண்டும்.

★ கல்வியில் சமவாய்ப்பு அளிப்பதை உறுதிப்படுத்தும் வகையில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கு கற்றல், கற்பித்தல் உபகரணங்கள், கணனிகள் எடுத்துச் செல்ல அனுமதிக்க வேண்டும்.

★ வடக்கு-கிழக்கில் உள்ள பாடசாலைகளில் கடமை புரியும் சகல அதிபர், ஆசிரியர்கள், கல்வித் திணைக்கள ஊழியர்களுக்கு மாவட்ட ரீதியான பாகுபாடு காட்டப்படாமல் சமமான அளவில் இடர்காலக் கொடுப்பனவு நிலுவை வழங்கப்பட வேண்டும். 95 ஆம் ஆண்டுக்குரிய அதிபர்களுக்கான சம்பள நிலுவையும் இதே அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.

(உ-3)


**இன்றைய ஓடியோ CD வெளியீடுகள்!**

- மின்சாரக் கண்ணா
- நீ வருவாய் என
- அந்தப்புரம்
- கண்ணோடு காண்பதெல்லாம்
- பூ பறிக்கும் நேரம்
- மனசேமனசே நீதானா

★ புதிய CD கள் விற்பனைக்கு உண்டு.

**மூர்த்தி வீடியோ சென்ரர்**

மானிப்பாய்.
T. P, No:- 2884
(67789)



எமது புதிய ஓடியோ CD வெளியீடுகள்!

★ மின்சாரக் கண்ணா
★ மிஸ்ரர் - Z
★ கண்ணோடு காண்பதெல்லாம்
★ மனசே மனசே
★ நீ வருவாய் என
★ அந்தப்புரம்
★ கண்களின் வார்த்தைகள்
★ பூபறிக்கும் நேரம்

(மின்சாரக் கண்ணா CD கள் விற்பனைக்கு உண்டு)

விலை 650/-

**மெலோடியஸ் மியூசிக்**

303, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/8337)


### திருநெல்வேலி...

(முதலாம் பக்கத் தொடர்)

றொனி பத்தலோமியஸ், லெப்டினன்ட் டிக்ஷன் ராஜமந்திரிய, இராணுவச் சிப்பாய் பியதாஸகே பிரியந்த ராஜகருண ஆகியோரின் காவலில் இருந்துள்ளார்.

இவர்களின் காவலிலிருந்த போது காலஞ்சென்றவர் சித்திரவதைத் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றார். அத்தாக்குதல்களினால் ஏற்பட்ட உடல்நோ, வேதனை, குருதிப்பெருக்கு என்பன காரணமாக இரத்த அழுத்தக் குறைவு ஏற்பட்டு அதனால் ஏற்பட்ட அதிர்ச்சி, அதிககவலை என்பன காரணமாக அவர் மரணமடைந்துள்ளார் என முடிவு செய்கின்றேன்.

சாட்சியங்களின்படி குற்றச் செயலொன்று புரியப்பட்டுள்ளது என்பதற்கான நியாயமான ஐயுறவு உள்ளது என்பதனை வெளிப்படுத்துகின்றேன். எனவே பொலீஸார் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பணிக்கின்றேன்.

இம்மரணம் தொடர்பில் குற்றவியல் புலனாய்வுத் துறையினர் பாரபட்சமற்ற விசாரணையொன்றை மேற்கொண்டு சட்டமா அதிபதியுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பணிக்கின்றேன்.

மேலும் ராஜகருண தனது சாட்சியத்தில் லக்சிறீ என்ற பெயருடைய இராணுவச் சிப்பாய் காலஞ்சென்றவரைக் காவலில் வைத்திருந்தார் என்று கூறியிருந்தார். இவ்விடயம் பற்றிய பூரண விசாரணை செய்து அறிக்கை செய்ய வேண்டும் என்று பணிக்கின்றேன். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மாணவர்கள்..,

(முதலாம் பக்கத் தொடர்)

களும் மாணவர்களும் நேற்று முற்பகல் 11.00 மணியளவில் அனுச்சியன்குளம் சந்தியில் இருந்துஆர்ப்பாட்டப்பேரணி ஒன்றை ஆரம்பித்தனர்.

பின்னர் பேரணியில்கலந்து கொண்டோர் மல்லாவியில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அலுவலகத்தைச் சென்றடைந்து அலுவலகப் பிரதிநிதியிடம் மகஜர் ஒன்றைக் கையளித்ததோடு பாதை திறப்புத் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து அவர்கள் மல்லாவியில் உள்ள அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தை அடைந்து மகஜர் ஒன்றின் பிரதியை அங்குள்ள பிரதிநிதி ஒருவரிடம் கையளிக்க முயன்றனர் எனவும்—

அப்போது தமது அலுவலகம் முன்பாகமறியல்போராட்டம் தொடர்ந்து நடத்தப்படுவதனால் குறித்த மகஜரை உரியவர்களுக்கு தன்னால் அனுப்பமுடியாது எனக்கூறி மகஜரை ஏற்க மறுத்துவிட்டார் என்றும் — தெரிய வந்தது.

எனினும் பேரணி நடத்தியோர் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கேட்டதற்கிணங்க இறுதியில் அவர் மகஜரைப் பெற்றுக்கொண்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது (உ-7)


**கலைவாணி கல்வி நிலையம்**

கோப்பாய் வடக்கு.

**O/L கணிதம்**

வினா விடை வகுப்பு
(10 வருடம்)

ஆரம்பம்: 01 - 08 - 99
(ஞாயிறு 4-00 மணி)

by:
திரு. S. கமலதாசன்
(சி/8324)


### கிருபாவின்..

(முதலாம் பக்கத் தொடர்)

வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

பின்னர் நேற்று பொதுமக்களின் அஞ்சலிக்காகபுளொட் அமைப்பின் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள முகாமிற்கு சடலம் எடுத்து வரப்பட்டு அங்கு வைக்கப்பட்டிருந்தது. அங்கு இரங்கல் கூட்டமும் இடம் பெற்றது.

மாலை 5. 30 மணியளவில் அவரது உடல் பாண்ட் வாத்திய இசை சகிதம் வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு எரியூட்டப்பட்டது.

நேற்றைய இறுதி அஞ்சலி நிகழ்வுகளை ஒட்டி யாழ் நகரக் கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது. வாழைகள், கறுப்புக் கொடிகள், தோரணங்கள் நகரில் கட்டப்பட்டிருந்தன.

(உ-5-6-15-139)

### பாதையைத்...

(முதலாம் பக்கத் தொடர்)

டி. பி., புளொட், ஈ. பி. ஆர். எல். எவ்., ரெலோ, ஈரோஸ், தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளும், கொழும்பு வாழ் தமிழ் பணிக்குழுப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

பாதை ஒன்றைத் திறந்து வன்னிக்கு உணவு மற்றும் அத்தியாவசிய மருந்துப் பொருள்களை உடன் அனுப்ப வேண்டும் என்றும் —

வன்னியில் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதியில் ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையை நடத்த ஏற்பாடுசெய்ய வேண்டும் என்றும் —

ஜனாதிபதியைக் கோரும் 'பக்ஸ்' செய்தி ஒன்றை அனுப்புவதென இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இந்தக் கோரிக்கைகளுக்கு உரிய பதில் உடன் கிடைக்காத பட்சத்தில் அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றி ஆராய நடவடிக்கைக் குழு ஒன்று கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம், "ஜனாதிபதிக்கு இது தொடர்பாக 'பக்ஸ்' செய்தி அனுப்புவதில் பயன் ஏதும் இல்லை. சகல தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசுக்கு அளிக்கும் ஆதரவை விலக்கப்போவதாக நெருக்குதல் கொடுக்க வேண்டும். அப்போதுதான் ஏதாவது நடக்கலாம்" என்ற கருத்தை வெளியிட்டார். (உ-3-7)

### ஆலிக்...

(முதலாம் பக்கத் தொடர்)

அவர்களின் பெயர் விவரம் வெளியிடப்படவில்லை.

உயிரிழந்த 15பேரில் நேற்று பெயர் வெளியிடப்பட்ட 12 பேரின் விவரம் வருமாறு:-

★ பீற்றர் (வயது 23)
★ துஷ்யந்தன் (வயது 21)
★ நீலவாணன் (வயது 23)
★ தேவகுமார் (வயது 25)
★ சிவகுமார் (வயது 38)
★ ஆனந்த சங்கர் (வயது 23)
★ நிரஞ்சன் (வயது 24)
★ செல்வவதனன் (வயது 20)
★ ரமேஷ் (வயது 34)
★ சுனி (வயது 18)
★ யோசப் (வயது 26)
★ பூவானந்தன் (வயது29)

(உ-3-7)

### 2000 பேர்..

[முதலாம் பக்கத் தொடர்]

கப்படுகின்றது.

பொதுமக்கள் செல்லும் பாதை தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் இணக்கம் ஏற்பட்டிருந்தால் மட்டுமே அந்தப் பாதைப் பிரதேசத்தில் தாம்புதைத்துள்ளகண்ணி வெடிகளை அவர்கள் அகற்றியிருப்பர் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

அதேநேரம் — 2 ஆயிரம் பேரையும் பதியும் பணி நேற்றிரவு வரை நடைபெற்றது.

[உ-3-164]

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28 - 07 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org